265

265

# Nine Lilies of the Tamil Land

BY

R. P. SETHU PILLAI, B.A., B.L.,
Senior Lecturer in Tamil, University, Madras

WITH A FOREWORD

BY

The Hon'ble Sir T. N. SIVAGNANAM PILLAI, Kt.,
Minister for Development.

APPROVED BY THE M.T.B., COMMITTEE
Vide Fort St. George Gazette page 516 of Part I-B
Dated 16th Nov., 1926.

...OTTRUMAI OFFICE,
...AYANAGAR, MADRAS.

[Price As. 10

Y15x
N43
59820

# முன்னுரை

திருவாளர் ஆர். பி. சேதுப் பிள்ளையவர்கள் எழுதியிருக்கும் "தமிழ் நாட்டு நவமணிகள்" என்னும் இந்நூலைப் பார்வையிட்டு மிகவும் மகிழ்வெய்தினேன். பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்பை இக்காலத்துத் தமிழ்ச் சிறுர்க்கு எடுத்தோதும் புத்தகங்களும், பண்டு தொட்டு சரித்திர வாயிலாகவும் பனுவல்கள் மூலமாகவும் அறியக்கிடக்கும் நம்நாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும் தற்காலம் வெளிப்போந்துள்ள நூல்களுள் காண அரிதாயினவே என்று நெடுநாளாக நானும் என்போன்ற பிறபலரும் கருதியிருந்த ஒரு பெருங் குறையை இப்போது ஆசிரியர் நிறை செய்துள்ளார். ஒரு நாட்டின் மக்கள் சிறப்படைதற்கு அந்நாட்டின் பெண்களே காரணமாவர்; அடைந்த சிறப்பிற்கும் அப் பெண்களே உரியருமாவர். இக்கூற்றின் உண்மையை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது. நவமணிகளுள் எவரேனும் ஒருவரைச் சிறப்பாய்க் குறிப்பித்தல் ஓர் வஞ்சகமாய்த் திருமேனினும், முற்காலத்து மங்கையர்க்கரசியாரும் திலகவதியாரும் எவ்விதம் தமிழ்ச் சமயமும் அறவொழுக்கமும் புத்துயிர் பெற்றுப் பொலியச் செய்தனரோ. அவ்விதமே தற்காலமும் நம் பெண்கள் செய்தல் கூடும் என்று உறுதியாய் நம்புகின்றேன். அத்துடன் இப்புத்தகத்தைப் படிக்கும் பிள்ளைகட்கு சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பண்டைய நூல்களைத் தாமே ஆராய்ந்தறிய ஊக்கம் பிறக்கும் என்பதும் திண்ணம்.

மயிலை,
12-2-'26

தி. நே. சிவஞானம்.

# தமிழ் நாட்டு

# நவமணிகள்

ஸ்ரீமான் ஆர். பி. சேதுப் பிள்ளை, பி.எ., பி எல்.
இயற்றியது.

அபிவிருத்தி இலாகா மந்திரி
கனம் சர். தி. நே. சிவஞானம் பிள்ளை
முன்னுரை எழுதியது

'ஒற்றுமை' ஆபீஸ்,
தியாகராயநகர், சென்னை.
1943

[விலை அணு 10

# பொருள் அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | ஆதிரையார் | ... 1 |
| 2. | விசாகையார் | ... 11 |
| 3. | மருதியார் | .... 18 |
| 4. | கோப்பெருந்தேவியார் | ... 22 |
| 5. | மணிமேகலையார் | ... 28 |
| 6. | கண்ணகியார் | ... 51 |
| 7. | புனிதவதியார் | ... 72 |
| 8. | மங்கையர்க்கரசியார் | ... 82 |
| 9. | திலகவதியார் | ... 105 |

தமிழ் நாட்டு

# நவமணிகள்

## 1. ஆதிரையார்

"கற்புடை மங்கையைக் கனலும் அஞ்சும்"

**நீர்வளம்** முதலிய நால்வகை வளங்களும் நிறைந்த சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப் பூம் பட்டினத்தில் சாதுவன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் இளமையும் செல்வமும் இனிதமைந்தவனாய் மங்கையர்கள் மனங் கவரும் வனப்பு வாய்ந்திருந்தான். அந் நகரிலேயே ஆசிலாச் சிறப்பு வாய்ந்த ஓர் அருங் குலத்தில் ஆதிரை என்னும் நல்லாள் தோன்றிப் பன்னிரண்டு ஆண்டு அமைந்த பாவையாய் விளங்கினாள். இவ்வாறு நலத்தாலும் குலத்தாலும் ஒத்த இருவருக்கும் திருமணம் நிகழ்ந்து காதலனும் காதலியும் இரண்டு ஆண்டுகள் மனம் ஒத்து இல்லறமென்னும் நல்லறத்தை இனிது நடத்தினார்கள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் சாதுவன் அந்நகரில் நிகழ்ந்த ஒரு நாடகத்தைக் கண்டு

களிக்கச் சென்றான். அங்கு அரங்கத்தில் நின்று நடித்த ஒரு நாடகமாது தனது அழகால் அவன் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தாள். அந்நாடகக் கணிகையின் நயம் சிறந்த ஆடல்களைக் கண்டும், பாடல்களைக் கேட்டும், சாதுவன் அவள் மையலிலே தாழ்ந்தான். நாடகம் முடிந்ததும் வீட்டிற்குச் சென்று விடியுமளவும் கண்ணிமையாமல், அவன் அக் கணிகையின் அழகையே எண்ணி எண்ணி இன்பவாரியில் திளைத்திருந்தான். பொழுது புலர்ந்ததும் அப்பொது மாதின் மனையிற்சேர்ந்து அவள் மாயவலையிற் பட்டான்.

இவ்வாறு சாதுவன் தன்காதலியை மறந்து கணிகையுடன் களித்து வாழும் நாளில் அவனது முன்னோர் தேடிவைத்திருந்த அரும்பொருளெல்லாம் அழிந்துபோயிற்று. அப்பொது மாதும் அவன் பொருளையெல்லாம் பறிக்கும் வரை, பொன்னே, மணியே யென்று அவனைப் போற்றினாள். பொன்னையும் மணியையும் கவர்ந்துகொண்டு சாதுவனைக் கைவிட்டாள். ஒரு மலரிலுள்ள நறுந்தேன் முழுமையும் மாந்திய பின்னர் அவ்வரும்பூவைத் துறக்கும் வண்டு போல அப் பொதுமகளும் சாதுவனைக் கைவிட்டு மற்றொரு செல்வனைச் சேர்ந்தாள். சாதுவனும் உண்ண உணவும் உடுக்க உடையும்

அற்றவனாய் வறுமையால் மிகவருந்தினான். அரும் பெருங் குணங்கள் அமைந்த ஆதிரைக்குத் தான் இழைத்த தீங்கை எண்ணி நாணித் தன் மனையிலும் சேராது துயருழந்தான்.

இவ்வாறிருக்கையில் வங்க நாட்டினின்றும் சில வணிகர் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் பண்ட மாற்றுச் செய்யும்பொருட்டு வந்திருந்தார்கள். அவர்கள் மீண்டும் தம் நாட்டிற்குப் புறப்படும் பொழுது சாதுவனும் அந்நாட்டிற்குச் செல்ல விரும்பி, அவ்வணிகரிடம் தன் கருத்தை அறிவித்தான். அவர்களும் அவனைத் தம் கப்பலில் ஏற்றிச் செல்ல இசைந்தார்கள், ஒருநாள் மாலை மரக்கலம் துறைமுகத்தினின்றும் புறப்பட்டது. கடலில் நெடுந்தூரம் சென்றபின் கடுங்காற்று விசையாக வீசக் கருமேகம் கடுகித் திரண்டு இடிமுழக்கம் செய்யக் கருங் கடலில் எங்கும் இருளே நிறைந்து இரவு மிகப் பயங்கரமாக இருந்தது. கடல் கொந்தளித்து மரக்கலத்தைக் கவிழ்த்துவிடும் என்றறிந்த கப்பல் தலைவன் அபாய நிலையை அங்குள்ளார்க்கு அறிவித்தான். அப்பொழுது கப்பலில் இருந்த நன்மக்கள் தமக்கு அழியும் காலம் வந்ததென்று அறிந்து, இறைவனை நினைந்து கைகூப்பித் தொழுதார்கள். சாதுவனும் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைத் தன் இருகரங்களாலும்

தொழுது ஆசிலாத் தன்மைவாய்ந்த ஆதிரைக்குத் தான் செய்த தீமையை யெண்ணி ஏங்கிக் கண்ணீர் பெருக்கினுன். சிறிது நேரத்திற்குள் கப்பல் கடலில் தாழ்ந்தது. கடல் முழக்கமும் இடிமுழக்கமும் கப்பல் முழக்கமும் ஊழிக் காலப் பெருமுழக்கம் போல நடுக்கத்தைக் கொடுத்தது. கடலுள் விழுந்த மக்களிற் பலர் நீரில் முழுகி மாண்டார்கள். சிலர் அங்கு மிங்கும் நீந்தித் தத்தளித்துத் தடுமாறிப் பல திசைகளிலும் சிதறிக்கிடந்த மரக்கட்டைகளையும், பாய் மரங்களையும் பற்றிக்கொண்டு அலைகளில் மோதி மொத்துண்டு அல்லற்பட்டார்கள். சாதுவன் தண்ணீரில் விழுந்ததும் அவன் அருகே ஒரு பாய்மரம் மிதந்துகொண்டிருக்கக் கண்டான். தண்ணீரில் தத்தளிப்பவனுக்குச் சிறு துரும்பும் தெப்பமாம் என்னும் பழமொழிக்கிணங்க அவன் அப்பாய்மரத்தைப்பற்றி அதன் மீது படுத்துக்கொண்டான். எத்திசையும் செறிந்திருந்த இருளும் கருங்கடலின் ஆரவாரமும், கடும்புயலின் முழக்கமும், கருமேகத்தின் இடியோசையும் கேட்டபொழுது, சாதுவன் தனது அபாய நிலையை அறிந்து கசிந்து உருகினுன். கற்புக்கு உறைவிடமாகிய தன் காதலியை நினைந்தான். ஐயோ! பாவாய்!! நான் உயிரோடிருந்தும் உனக்குத் துன்பமே செய்

தேன். இறந்தும் உனக்குத் துன்பமே செய்யப் போகிறேன். பாவியேன் புறப்படும்பொழுது உன்னிடம் ஒரு சொல்லும் சொல்லாமல் வந்தேனே; இனி உன்னை என் கண்களாலே காண்பேனே? உன் கனிந்த சொற்களை என் காதினால் கேட்பேனே? நீ என்னோடிருக்கும் பொழுது இக்கடுவிதி எனக்கு வரலாகாதா என்று புலம்பிக் கண்களை இறுகப் பொத்திக் கொண்டு பாய்மரத்தின்மீது மிதந்து கொண் டிருந்தான். பாய்மரமும் அலைகளின் வழியே சென்று பொழுது புலர்ந்ததும் ஒரு மலை நாட் டில் அவனைக் கொண்டு சேர்த்தது.

சாதுவனைப் போலவே மரக் கட்டைகளை யும் பாய்மரங்களையும் பற்றிக்கொண்டு கடலில் மிதந்த வேறு சிலர் மறுநாள் காவிரிப்பூம் பட் டினக் கரையில் வந்து சேர்ந்தார்கள். அவர் களைக் காண அந்நகர மக்களெல்லாம் கடற் கரையில் திரள் திரளாக வந்து சேர்ந்து, ஆழி வாய்ப்பட் டழியாமல் தப்பிப் பிழைத்த அம் மக்களிடம் கடலில் நிகழ்ந்த கடுஞ் செயல்களை அதிக ஆவலுடன் கேட்டார்கள். அவர்களும் கப்பல் கடுங்காற்றில் அகப்பட்டுத் தாழ்ந்த வர லாறு முழுமையும் எடுத்துரைத்து அந்நகர மக்களில் ஒருவனான சாதுவனும் கடலில் விழுந்து இறந்தான் என்று மொழிந்தார்கள்.

அது கேட்ட ஆதிரை எரிகின்ற புண்ணில் ஈட்டி தைத்தாற் போல, மனம் நொந்து காதலன் இறந்த பின்னர் உயிர்வாழ மனமற்றவளாய் அப்பொழுதே அங்கர மயானத்தில், தீ வளர்த்து அச் செந்தீக்குழியில் இறங்கி உயிர் துறக்க எண்ணினாள். அம்மாது தன் அழகிய கூந்தலில் நறுமலர் மாலை புனைந்து, ஆகத்தில் நறுமணம் கமழும் நற்சாந்தம் பூசி, இடையில் நலங்கொள் பூம் பட்டணிந்து மணக்கோலத் தோடு மயானத்தை அடைந்து ஊரார் எவரும் அறியாமல் தீக்குழியில் இறங்கினாள். அவ்வாறு இறங்கும் பொழுது தன் கணவனையே கருத்தில் இருத்தி, இம்மையில் அவனுடன் கூடி அடை யாத இன்பத்தை மறுமையிலேனும் அடைய வேண்டுமென்று தன் வழிபடு தெய்வத்தை வணங்கிக் குளிர்ந்த பொய்கையில் நீராட இறங்குபவள் போல நெருப்பினுள்ளே இறங்கி னாள். அவளது கற்பின் பெருமையைக் கண்டு சுடு நெருப்பும் அவளை அணுகாது சூழ்ந்து நின்றது. அவளது கருங்கூந்தலில் புனைந்திருந்த மலர் மாலை வாடாமல் நிறம் குன்றாமல் முன் போலவே இலங்கிற்று. அவள் புனைந்திருந்த மெல்லிய பூம்பட்டாடையும் சிறிதும் நிறம் வேறுபடாமல் முன் போலவே விளங்கிற்று. அவள் உடம்பில் அணிந்திருந்த சாந்தமும் முன்

போலவே நறுமணம் கமழ்ந்தது. இவ்வாறு ஆதிரை அகன்று கொழுந்து விட்டெரியும் நெருப்புக் குழியின் நடுவே அழகிய செந்தாமரையில் அமர்ந் தினிதிருக்கும் திருமகள் போல இலங்கித் தோன்றினாள். இப் புதுமையைக் கண்ட ஆதிரை தன் தலைவிதியை நொந்து, ஐயோ "தீயுங்கொல்லாத் தீவினையளாகிய நான் இனி என் செய்வேன்?" என்று ஏங்கி அழுதாள். அம்மாது படுந் துயரைக்கண்டு மனம் பொறாது அம்மயானத்தி லுறைந்த ஒரு தெய்வம் அசரீரியாய் நின்று "மாதே, உன் கணவன் உயிர் துறந்தா னல்லன்; கருங் கடலினின்றும் தப்பிப் பிழைத்து நாகர்வாழும் நாடு சேர்ந்தான்; இன்னும் சில நாட்களில் இங்கு வந்து உன் மனக் கவலையை மாற்றுவான்" என்று மொழிந்தது. இதைக் கேட்ட ஆதிரை ஒருவாறு மனம் தெளிந்து தன் மனக் கவலையை மாற்றி மனையகம் புகுந்து கணவன் கடிதில் வரவேண்டும் என்று தன் வழிபடு தெய்வத்தை வணங்கி வந்தாள்.

இஃதிவ்வாறிருக்கக் கடலில் அழியாமல் கரையேறிய சாதுவன் கடற்கரையில் அயர்ந்து நித்திரை போயினான். அவ்வழியாக வந்த அந் நாட்டு மக்கள், அயலான் ஒருவன் அயர்ந்து தூங்குவதைக் கண்டு களிகூர்ந்து தமக்கு அன்று

நல்ல உணவு கிடைத்ததென்று மகிழ்ந்து அவனைத் தூக்கிக்கொண்டு தம் அரசனிடம் சென்ருர்கள். அப்பொழுது சாதுவன் விழித்துப் பார்த்தான் ; தன்னைச் சுற்றிப் பேயுருக்கொண்ட வேற்று மக்கள் நிறைந்து நிற்பதைக் கண்டு நடுங்கினன். அவனைக் கண்ட அரசன் அந் நாட்டு மொழியில் சாதுவனை யாரென்று வினவினன். அம்மொழியைச் 'சாதுவனும் அறிந்திருந்தமையால் தன் ஊரும் பேரும் உரைத்துத் தனக்குக் கடலில் நேர்ந்த கடுந்துன்பத்தையும் உருக்கமாக எடுத்துரைத்தான். அதைக்கேட்ட நாக மன்னனும் மனமிரங்கி, அவன் பசியைத் தீர்க்கும் பொருட்டுக் கள்ளும் ஊனும் கொண்டு வரும்படி காவலாளரை ஏவினன். அதைக் கேட்ட சாதுவன் மனமயர்ந்து அரசனைப் பார்த்து "ஐயனே, ஊனும் கள்ளும் நான் உண்ணமாட்டேன். பசியால் என் உயிர் பிரிய நேர்ந்தாலும் இவற்றை நான் உட்கொள்ளேன்" என்று மொழிந்தான். அது கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து "சாதுவா, இவ்வுலகில் வாழும் மக்களுக்கெல்லாம் ஊனைப் போல் இன்பந் தரும் உணவும் கள்ளைப்போலக் களிக்கச் செய்யும் பானமும் வேறுண்டோ ? இவற்றை வேண்டாம் என்று மறுக்கும் மக்களும் உலகில் உண்டோ ?" என்று வினவினன். அதற்குச்

சாதுவன் ஐயனே! ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமல் வாழ்வதே உயரிய வாழ்வாகும். மயக்கும் கள்ளையும் மன்னுயிரைக் கொல்லும் மறத் தொழிலையும் கற்றறிந்த மக்கள் கடிந்துள்ளார்கள். மன்னுயி ரனைத்தையும் தன்னுயிர் போல் போற்றுவதே நல்லறமாகும்.

"நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென வுணர்தலின் உரவோர் களைந்தனர்"

என்று அரசனுக்குச் சாதுவன் நீதி புகட்டினான். இவ்வுறுதி உரையைக் கேட்ட மன்னவனும் மனம் தெளிந்து அன்றுமுதல் கள்ளையும் ஊனையுங் கடிந்தான். அரசன் வழியில் நின்ற அந் நாட்டுக் குடிகளும் கொல்லா நெறியை மேற் கொண்டு வாழத் தலைப்பட்டார்கள். சாதுவனும் நாகருடன் கலந்து மகிழ்ந்து வாழ்வானாயினான்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் சந்திரதத்தன் என்னும் வணிகனது மரக்கலம் வழிதப்பி நாகநாட்டின் கரையை அடைந்தது. அதைக் கண்ட சாதுவன் பெரிதும் மகிழ்ந்து அம் மரக் கலம் எங்கு செல்வதென்று வினவினான். அவ் வணிகன் தனது கலம் காவிரிப்பூம் பட்டினம் வரை செல்லும் என்று சொல்லியபொழுது பழம் நழுவிப் பாலில் விழுந்ததென்று சாதுவன் எண்ணி இறும்பூ தெய்தினான். அன்று காலை

அவ்வூர் அரசனிடமும் மற்றைய மக்களிடமும் விடைபெற்றுக்கொண்டு கப்பலில் ஏறினன். இவனது நற்குணங்களையும் நல்லொழுக்கத்தை யும் நன்கு அறிந்திருந்த நாகர், சாதுவனைப் பிரிந்தபோது 'கண்ணில்லார் பெற்றிழந்தார் போலப்' பெரிதும் வருந்தினர்கள். சாதுவனும் இடையூறின்றித் தன்நகர் அடைந்து நெடுநாள் பிரிந்து வாடி வருந்தி யிருந்த ஆதிரையைக் கண்டு களித்துப் பின் அம்மாதைப்பிரியாத பெருவாழ் வெய்தினன்.

இவ்வாறு இருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், ஒன்று பட்டு இல்லறத்தை இனிது நடத்தும்பொழுது அந்நகரில் மாதவியின் மகளாகிய மணிமேகலை வந்தடைந்தாள். அம்மாது துறவற நெறியை மேற்கொண்டு வறுமையால் வருந்தும் ஏழை மக்களது பசிப்பிணி நீக்கும் அறநெறியில் தலை நின்றாள். மணிமேகலையின் அருள் நிறைந்த மனப்பான்மையை அறிந்த ஒரு தெய்வம் அவ ளுக்கு ஓர் பாத்திரம் அளித்தது. அப்பாத் திரத்தில் கற்பிற் சிறந்த மங்கையின் கையால் அமுது அளிக்கப்பெற்றால் அவ்வன்னம் அள்ள அள்ளக் குறையாமல் உலகம் முழுதும் ஒருங்கே திரண்டு வந்தாலும் உணவளிக்கும் தகுதி யுடையதாய் விளங்கும் என்று அத் தெய்

வம் கூறியிருந்தது. அவ்வாறே மணிமேகலை பாத்திரத்தைக் கையிலேந்தி நகர வீதியின் வழியே சென்று மாசிலாக் கற்பமைந்த ஆதிரையின் மனையகம் புகுந்து சித்திரப் பாவைபோல் வாயிலில் நின்றாள். அம்மாதைக்கண்ட ஆதிரை அகம் மிகமகிழ்ந்து "பாரக மடங்கலும் பசிப் பிணியறுக" என்று வாழ்த்தி மணிமேகலையை மும்முறை வலம்வந்து தொழுது அவள் கையில் அமைந்திருந்த பாத்திரம் நிறைய ஆருயிர் மருந்தாகிய அன்னம் அளித்தாள். அன்று முதல் அமுதசுரபி என்று பேர்பெற்ற அப்பாத்திரம் வழங்கக் குறையாத வளத்தினை யுடையதாகி உலகில் பசியும் பிணியும் நீங்கி வசியும் வளமும் சுரக்குமாறு செய்தது. மாநிலத்தில் வாழ்ந்த மக்கள் எல்லாம் பசிப்பிணி நீங்கி ஆதிரையைப் பல்லாண்டு வாழ்த்தினார்கள்.

---

## 2. விசாகையார்

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றேனில் இன்றால்"
— மணிமேகலை.

முன் ஒரு காலத்தில் தமிழ் நாட்டின் கண்ணென இலங்கிய புகார் நகரத்தில் தரும தத்தன் என்னும் ஒரு வணிகனிருந்தான். அந்நகரத்திலே

யே அவனது அன்பார்ந்த தாய்மாமனும் செல்வத்தால் மிகச் சிறப்புற்று வாழ்ந்து வந்தான். தருமதத்தனது தாயாரும் தந்தையாரும் இளமைப் பருவத்திலேயே இவ்வுலகை விட்டகன்றமையால் 'தத்தன் தனது மாமன் மனையிலேயே வளர்ந்து வந்தான். அம்மாமன் பல்லாண்டுகளாக மகப்பேறின்றி வருந்திப் பலவகை நோன்புகளியற்றித் தானங்கள் செய்து அவற்றின் பயனாக ஓர் பெண் மகவைப் பெற்றான். அம்மகவு விசாக நாளில் பிறந்தமையால் அதனை விசாகை என்று பேரிட்டழைத்தார்கள், அப்பெண் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நலம் சிறந்து விளங்கினாள். ஒரு மனையிலேயே வளர்ந்து வந்த தருமனும் விசாகையும் ஒன்றாய் உண்டு விளையாடி ஒரு சாலையிலேயே கல்வி பயின்று எப்பொழுதும் இணைபிரியாத நண்பராய் வளர்ந்து வந்தார்கள்.

இவ்வாறு சில ஆண்டுகள் செல்ல இருவரும் மணப் பருவம் உற்றார்கள். விசாகை தருமனிடம் தலை சிறந்த அன்புடையவளாய் விளங்கினாள். அவ்வாறே தருமனும் அம்மங்கை மீது அருங் காதல் கொண்டிருந்தான். அதைக் கண்ட அந்நகர மக்கள் விசாகை தருமனைக் களவியல் முறையில் கலந்து மணந்து கொண்டாளெனப் பெரும் பழிமொழி எழுப்பி

னார்கள். ஊரார் தன் கற்பைக் குறை கூறுவதை அறிந்த அம்மாது பெரிதும் மனக் கவலை கொண்டு ஒரு நாள் தனது நல்லணிகளையெல்லாம் களைந்து விட்டுப் புனையா ஓவியம் போலப் புறம்போந்து, அந்நகரிலிருந்த பேரம்பலத்தை அடைந்து அங்கு அமர்ந்திருந்த ஒரு தெய்வத்தின் கோட்டத்தை மும்முறை வலம் வந்து தெய்வமே! நீ அறியாத செயல் இவ்வுலகில் ஒன்றுமில்லையே; யாதொரு பிழையும் அறியாத என் மீது இவ்வூரார் கூறும் பழிமொழியை நீ கேட்டாயோ? கேட்டால் நீ இவ்வாறு மௌனமாயிருப்பது முறையோ, தகுமோ, என்று அத்தெய்வத்தின் முன்னே விழுந்து தொழுதாள். இவ்வாறு தன் கோட்டத்தில் வந்து மனமுருகி நின்ற மாதினைக் கண்ட அத்தெய்வம் மனமிரங்கி அங்கு வழிபடும்பொருட்டு நிறைந்து நின்ற அன்பர்களெல்லாம் அறியுமாறு "இம்மாது கற்புடைய மங்கை, இவள் பெய்யென்றால் மழை பெய்யும்" என்று அசரீரியாய் ஒலித்தது. அதைக் கேட்ட மக்கள் எல்லாம் மனந்தெளிந்து மாசற்ற விசாகையின் மனதைப் புண்படுத்திய தங்கள் புன்மையை எண்ணி எண்ணி வருந்தினார்கள். அன்றுமுதல் அந்நகரத்தில் விசாகையின் மீது எழுந்த அலர் ஒழிந்தது.

விசாகையும் அம்பலத்தினின்றும் போந்து தன் மனைசேர்ந்து தனியாய் இருந்துகொண்டு என்மீது வீணே பழிசுமத்திய இந்நகர மக்கள் எல்லாம் நாணும்படி இப்பிறப்பில் கன்னி யாகவே காலங்கழித்து, மறு பிறப்பில் தருமனை மணந்து மகிழ்வேன் என்று உறுதிகொண் டாள். அவ்வாறே அன்பின் மிக்க தன் தாய் தந்தையரிடம் சொல்லிவிட்டு, அன்றே கன்னி மாடம் புகுந்து கடுந்தவம் புரியத் தொடங்கி ஞள். இதனை அறிந்த தருமன் அருமணி யிழந்த நாகம்போல ஆரூத் துயரடைந்து அந்நகரில் வாழ மன மற்றவனுய் வாணிகஞ் செய்யும் பொருட்டு மதுரைமா நகரை அடைந் தான். அங்கு வாணிகஞ் செய்து வருகையில் விசாகையை ஒழிய மற்றைய மாதரை மனத் திலும் தீண்டாது அவள் கன்னிமாடத்தினின்று மீண்டு வரும்போது அவளையே மணப்பதாக மனவுறுதிகொண்டு வாணிகத்தால் வந்த பொரு ளைத் தானங்களில் செலவு செய்து வந்தான். செல்வமும் சீலமும் ஒருங்கே படைத்தவனுகிய தருமனை மதுரையில் வாழ்ந்த மக்கள் எல்லாம் தம் உயிரினும் உயர்வாகக் கருதிப் போற்றினுர் கள். 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும் பும்' என்னும் பழமொழிக்கிணங்க மதுரையை அரசாண்ட மன்னவனும் தருமனது தனிப் பெருங் குணங்களை அறிந்து, அவனை அரசாங்க

அமைச்சனாக நியமித்து, அரும்பெரும் பட்டங்களும் அளித்தான். இவ்வாறு அறிவாலும் ஒழுக்கத்தாலும் ஒப்புயர்வுற்றவனாய்த் தருமன் வாழ்ந்து வருகையில் ஒருநாள் ஓர் அந்தணன் அவன்பால் வந்து, 'இருநிதிச் செல்வனே!

" பத்தினி இல்லோர் பல்லறஞ் செயினும்
புத்தே ளுலகம் புகார் "

என்ற உண்மையை நீ அறியாயோ? அறிந்திருந்தால் இன்னும் காலத்தை வீணேகழியாது உன் நகர் அடைந்து மனதிற்கிசைந்த ஒரு மாதினை மணந்து இன்புறுவாயாக என்று நீதி புகட்டினான். தருமனும் அந்நீதியை ஆர்வத்தோடு ஏற்று அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு, மதுரைமா நகரை விட்டுப் புகார் நகரை அடைந்தான். அங்கு தன் மனதில் ஒரு பொழுதும் நீங்காது உறைந்த காதலியைக் கன்னிமாடத்தில் கண்டான். அப்பொழுது அவள் இளமை நீங்கி, நரையும் திரையும் நிறைந்து பழுத்த உடம்போடு திகழ்ந்தாள். பலநாள் காணாதிருந்த அன்பனைக் கண்ட பொழுது விசாகை அளவிலா மகிழ்ச்சி கொண்டு ஐயனே! முன்னாள் நம்மை மயக்கிய மையல் இப்பொழுது எங்கு ஒளித்தது? உமக்கோ ஆண்டுகள் அறுபதும் நிறைந்தன; எனது நறுங் கூந்தலும் நரை கிரம்பியது; நமது இளமையும்

அழகும் இப்போது எங்கு ஒளித்தன என்று வினவினாள். தருமனும் விசாகை கூறிய மொழிகளைக் கேட்டு, உள்ளம் மகிழ்ந்து ஒன்றும் பேசாது புன்முறுவல் பூத்து நின்றான். ஆண்டுகள் அறுபதும் நிறைந்தும் தருமன் தன்மேல் கொண்ட காதல் சிறிதும் தளர்ந்திலது என்றறிந்த விசாகை 'ஐயனே! நான் இப்பிறப்பில் உமது அன்பிற்குரியவளாயமைந்து மறுபிறப்பில் உம்மையே மணந்து வாழ்வேன்' என்று அவனிடம் உறுதிகூறினாள். பின்னும்

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல் வருந் தாரார்
மிக்க அறமே விழுத் துணை யாவது"

என்னும் சீரிய உண்மையை அம்முதுமகள் எடுத்துரைக்கக்கேட்ட தருமனும் அவள் கருத்திற்கு இசைந்து தானம் செய்யத் தலைப்பட்டான். பெருஞ் செல்வத்திற் குரியராயிருந்த இருவரும் எண்ணிறந்த நல்லறங்கள் இயற்றினார்கள்.

*

* *

இவ்வாறு தூய வாழ்க்கையில் தலைநின்ற விசாகை ஒரு நாள் அரச வீதியின் வழியே தனியாக ஆலயத்திற்குச் சென்றாள். அப்பொ

மூது வீதியில் நின்ற அரசிளங்குமரன் அவளைக் கண்டு காதல் கூர்ந்து தன் தலையில் அணிந்திருந்த அழகிய மாலையை அம்மாதின் கழுத்தில் இடக்கருதித் தன் மணிக்கையை உயர்த்தி மாலையைத் தொட்டான்; உயர்த்திய கை அப்படியே நின்று போய்விட்டது! அரசிளங்குமரன் தன் கையைத் தணிக்கப் பலவாறு முயன்றும் பயன்படவில்லை. இவ்வாறு அவன் இடர்ப்படும்பொழுது விசாகை இறைவனை நினைந்து வீதியின் வழியே அப்பாற் சென்றாள். அரசிளங்குமரன் அச்சமும் நாணமும் அடைந்து அரண்மனை சேர்ந்தான். தனது அழகிய மைந்தனது கையின் கோலத்தைக் கண்ட அரசன் தன் மைந்தனென்றும் கருதாது தன் குலத்திற்கு ஒரு மைந்தனே யுள்ளான் என்றும் உணராது 'அறநெறி நிற்றலே அரசன் கடமை' என்னும் உயரிய நீதி ஒன்றனையே மனதிற் கொண்டு, அரசிளங்குமரனைத் தன் கைவாளால் வெட்டி வீழ்த்தினான். இவ்வாறு இறைமுறை போற்றிய மன்னவன் காவலில், 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும் தலைசிறந்து விளங்கின.'

---

# 3. மருதியார்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்"

—திருவள்ளுவர்.

முன்னொரு காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் ககந்தன் என்னும் அரசன் நீதி தவருமல் அரசாண்டு வந்தான். அவனது செங்கோல் முறையை அந்நாட்டுக் குடிகள் மனமாரப் புகழ்ந்து வாயார வாழ்த்தினர்கள். அவர்கள் அவ்வரசன் பெயராலேயே காவிரிப் பூம் பட்டினத்தையும் அழைக்கக் கருதிக் காகந்தி என்று அதற்குப் பெயரிட்டார்கள். ககந்தன் தன் நாட்டுக் குடிகளைக் கண்ணும் உயிருமாகக் கருதிப் போற்றி வந்தான். ஒவ்வொரு இரவிலும் மாறுகோலம்கொண்டு அந்நகர மக்கள் அரசாங்கத்தைப்பற்றி என்ன பேசிக்கொள்கிருர்கள் என்று கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தான். இவ்வரசனுக்கு இரண்டு ஆண்மக்கள் பிறந்தார்கள். இருவரும கல்வியிலும் படைக்கலத்திலும் நன்ருய்ப் பயின்றிருந்தும் கழிந்த காமுகராய் இருந்தார்கள். இவர்களில் இளையவன் ஒருநாள் காவிரி யாற்றுக்கு நீராடச் சென்ருன். அப்பொழுது மருதி என்னும் ஓர் பெண்மணி ஆற்றில் முழுகி உல்

ராத ஆடையை உடுத்து அவன் எதிரே வந்து கொண்டிருந்தாள். அவளது மாந்தளிர்போன்ற மேனியின் அழகையும், மயில்போன்ற சாயலை யும், அன்ன நடைபோன்ற மெல்லிய நடையை யும் கண்டு, அரசிளங்குமரன் அவளைக் காதலித் தான். அப் பெண்மணியோ தனிமையாகத் தன் பாதப் பெருவிரலையே பார்த்துக்கொண்டு நடந்து வந்தாள். அரசிளங்குமரன் அவள் மேல் கொண்ட காதலை அடக்க முடியாதவனாய், அவள் எதிரே விரைந்துசென்று நின்றான். அப் மாது எதிரே வருபவனை ஏறிட்டுப் பாராமல் வழி நடந்தாள். இதைக்கண்ட இளைஞன் இனி எப்படியும் தனது காதலை அவளிடம் அறி வித்தே தீரவேண்டும் என்று எண்ணி "மாதே! நீ என்னோடு வா" என்று அழைத்தான். அச் சொல் செவியில் பட்டதும் இடியோசை கேட்ட மயில்போல மருதி மயங்கிக் கலங்கி னாள். தன்முன்னே நின்ற இளைஞனைக் கண் ணெடுத்துப் பார்த்தாள். அவன் கண்களில் காதல் குறிப்பு இலங்கக் கண்டாள். உடனே வேடன் வலையினின்று தப்பியோடும் மானைப் போல விரைந்தோடி அருகேயிருந்த பூதச் சதுக்கம் என்னும் கோயிலிற் புகுந்து தாளிட் டுக் கொண்டாள். அவளது மேனி முழுவதும் படபட வென்று துடித்தது. செங்கண் சிவந்

தது. மெய் முழுவதும் வியர்த்தது. அழலருகே சேர்ந்த மலர்போல அவளது அங்கங்கள் சோர்வுற்றன. இக்கோலத்தோடு அக்கோயிலிலிருந்த தெய்வத்தினிடம் சென்று, "ஓ தெய்வமே! கற்புடைய மாதர் பெய்யென்றால் மழையும் பெய்யுமே! அத்தகைய கற்பையுடைய மாதர் ஆடவர் நெஞ்சில் சென்று அடையாரே! இவ் வரசிளங்குமரன் மனதில் நான் செல்லுதற்கு என்ன தவறு செய்தேன்? என்னைக் கொண்ட கணவனுக்கு யாதொரு குற்றமும் செய்தறியேனே! நான் செய்த குற்றத்தை என்னிடம் ஏ! தெய்வமே! நீ எடுத்துரையாயோ? நீ இங்கிருப்பது பொய்யோ? மெய்யோ?" என்று அழுது புலம்பினாள். இவ்வாறு மருதி அழுவதைக் கண்ட அத்தெய்வம் மனமிரங்கி அவள் முன்பு ஒரு இளம்பெண்ணாகத் தோன்றி, "மாதே, நீ வருந்தாதே; கணவனைத் தெய்வம் என்று கருதி ஒழுகும் மாதர் பெய்யென்றால் மழை பெய்யுமென்பது உண்மையே; ஆயினும் பயனற்ற பொய்க்கதைகளை நீ ஆர்வத்தோடு பயின்றுவந்தாய். திருவிழாக் காலங்களில் கண்டோர் கண்களைக் கவரத்தக்க ஆடை அணிகளை அணிந்து செல்வாய்; இக்குறைபாடுகள் உன்னிடம் இருந்தமையாலேயே அரசிளங்குமரன் உன்னைக் காதலித்தான். ஆயினும் உனது கற்பு

நிலையில் யாதொரு களங்கமும் இல்லை. இந் நகரை அரசாளும் ககந்தன் நீதி வழுவாத நெறி முறையில் நிற்பவன். அவன் மகனால் உனக்கு நேர்ந்த குற்றத்தை அவனே அறிந்து நீதி செலுத்துவான். அவ்வாறு இன்னும் ஏழுநாள் வரையும் அவன் இக்குற்றத்தை அறியானாயின் உனக்குத் தீங்கிழைத்தவனை நானே ஒறுப் பேன்'' என்று சொல்லி மறைந்தது. தன் நாட் டரசன் நடுநிலை வழுவாது நீதி செலுத்தும் நேர் மையை அத்தெய்வத்தின் வாயிலாக அறிந்த மருதி மனக்கலக்கம் தீர்ந்து தன் மனை சேர்ந் தாள்.

பூத சதுக்கத்தில் புகுந்த பூங்கொம்பைக் காணாது மன்னவன் குமாரன் மனந் திகைத்துக் கண்ணிலகப்பட்ட கனி கரத்தில் அகப்படாமல் மறைந்ததற்கு மனம் வருந்தி, மாளிகை சேர்ந் தான். அரசிளங்குமரன் அரண்மனை யடையு முன்னரே ககந்தன், நிகழ்ந்த செயல்களைத் தன் ஒற்றரால் அறிந்திருந்தான். தன் அருமந்த மைந்தன் மாளிகை புகுந்ததும் ககந்தன் தன் தனது உடைவாளை உருவி அரசகுமாரனை ஒரே வெட்டாய் வெட்டினான். வெட்டுண்ட தலையும் உடலும் வெவ்வேறாக விழுந்தன. இவ்வாறு தவறு செய்த தன் மகனைக் கொன்று முறை செய்த மன்னவனது நீதியை அந்நாட்டு மக்கள் பலபடப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

# 4. கோப்பெருந்தேவியார்

"கலக்கம் கொள்ளாள், கடுந்துயர் பொருள்
மன்னவன் செல்வுழிச் செல்கயானென
தன்னுயிர் கொண்டவன் உயிர் தேடினள் போல்
கோப்பெரும் பெண்டும் ஒருங்குடன் மாய்த்தனள்"

—சிலப்பதிகாரம்.

முன் ஒரு காலத்தில் பழம்பதியாகிய மதுரைமாநகரில் நெடுஞ்செழியன் என்னும் மன்னவன் நீதி தவருது அரசாண்டுவந்தான். அவனது அரண்மனையில் மறை ஒலியாகிய மங்கல ஒலியே யன்றி அசையா மணியோசையே எந்நாளும் கேட்டதில்லை. அவ்வரசன் நீதியை உயிரினும் உயர்வாகப் போற்றி நெறி தவருது அரசியல் நடத்தினன்.

அவ்வரசனது மனைவியாகிய கோப்பெருந்தேவி அழகால் திருமகளையும், கற்பால் அருந்ததியையும் போன்றவளாய், நல்லிசைப் புலமை வாய்ந்து விளங்கினுள். ஒருநாள் அரசன் தனது அரண்மனையில் நாடகம் நடித்த ஒரு பொதுமகளின் ஆடல் பாடல்களால் இன்புற்று அவள் மையலிலே தாழ்ந்தான் என்று அறிந்த கோப்பெருந்தேவி பெரிதும் மனக்கவலை கொண்டு மஞ்சுசூழ்ந்த மதிபோல மயங்கியிருந்தாள். இதனை அறிந்த அரசன் தன் காதலியின் மன

வாட்டம் திருத்துமாறு அந்தப்புரத்தை நோக்கி அதிவிரைவாகச் சென்றுகொண்டிருந்தான்.

இதற்குச் சில தினங்கட்குமுன்னர் அரண்மனையில் கோப்பெருந்தேவியார் கால்களில் அணிந்திருந்த சிலம்புகளில் ஒன்று காணமற் போயிற்று. அழகிய பொற்சிலம்பைக் காணுத அரசி பெரிதும் மனம் வருந்தினுள். அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்து சென்ற கள்வனைக் கண்டுபிடிக்கப் பலவாறு முயன்றும் பயன்படவில்லை. இவ்வாறு அரசனது மனம் காதலியின் சோகத்தாலும், சிலம்பைக் காணுத கவலையாலும், பெரிதும் வருந்தி யிருக்கையில் அரண்மனையைச் சார்ந்த பொற்கொல்லன் ஒருவன், அந்தப்புரத்தின் அருகே அரசனைக் கண்டு பணிந்து “அரசே! கோப்பெருந்தேவியார் காற்சிலம்பை ஒரு கள்வன் கையில் கண்டேன்; அக்கள்வன் என் சிறு மனையில் அகப்பட்டான்” என்றுன். அதைக்கேட்ட அரசன் அளவிலா மகிழ்வடைந்து வினை விளை காலமாதலாலும், காம மயக்கத்தாலும் “அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக” என்று தன் காவலாளரை ஏவி அந்தப்புரஞ் சென்றுன்.

அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்துகொண்ட களவாடும் வன்னெஞ்சக் கள்வனுகிய பொற்

கொல்லன், தான் எண்ணிய தீய எண்ணம் எண்ணியவாறே முற்றுப் பெற்றது என்று இறுமாந்து வாளும் வேலும் தாங்கிய காவலாளர் பின்னே வரப் படைத்தலைவன் போல முன்னே சென்றான். இவ்வாறு மிக ஊக்கத்தோடு வழி நடந்து தன் மனையை அடைந்து அங்கு யாதொரு குற்றமும் அற்றவனாய் அமர்ந்திருந்த கோவலனை அவ்வீரர்களிடம் காட்டி "இவன் தான் அரசனால் கொலை செய்யுமாறு ஆணை செய்யப்பட்ட கள்வன்; இவனைக் கொல்லுங்கள்" என்றான். இதைக்கேட்ட கல்லாக் களிமகனாகிய வீரன் ஒருவன் தன் கையிலிருந்த கூரிய வாளால் கோவலனை வெட்டிக் கொன்றான்.

இஃதிவ்வாறிருக்கையில், அரசனது அரண்மனையில் கோப்பெருந்தேவி ஒரு தீக்கனவு கண்டாள். அரசனது செங்கோலும் வெண்குடையும் நிலைகுலைந்து விழுவது போலும், விண்மீன்கள் உதிர்ந்து விழுவது போலும் எண்டிசையும் அதிர்ந்து நடுங்குவது போலும் அரசமாதேவி கனவு கண்டு அதனை அரசனிடம் அறிவிக்கச் சென்றாள். அப்பொழுது அரசன் தனது அத்தாணி மண்டபத்தில் அரியாசனத்தில் இனிதமர்ந்திருந்தான். கோப்பெருந்தேவியும் அவனருகே அமர்ந்துதான் கண்ட தீக்கனவை மனங்

கலங்கிக் கூறிக்கொண்டிருந்தாள். அரசனும் அம்மொழியைக் கேட்டு அரசாங்கத்திற்கு என்ன தீங்கு நேருமோ என்று எண்ணி வாட்ட முற்றான்.

இவ்வாறு இருவரும் கவலைக்கடலில் மூழ்கியிருக்கையில் தன் காதலனாகிய கோவலனை இழந்த கற்பரசியாகிய கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்து அங்கு நின்ற காவலாளனிடம் அரசனைத் தான் காண விரும்புவதாகக் கூறினாள். அரசனும் அவ்வாறே அநுமதி கொடுக்கக் கற்புடைய மங்கையும் காவலன் கண்ணெதிரே தோன்றினாள். அவளது சோர்ந்த மேனியையும் கலங்கிய கண்களையும் கண்ட காவலன், "மாதே, நீ யார்" என்று வினவினான். அதற்கு அம்மாது "ஓர் பசுவின் கன்றைக் கொன்ற தன் மகனைக் கொன்று நீதி போற்றிய வளவன் ஆளும் சோழ நாட்டில் மாசாத்துவானுக்கு மகனாகப் பிறந்து, வறுமையால் இந்நகர் புகுந்து, என் காற்சிலம்பை விற்கவந்து நின்றால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவியே யான்" என்றாள். அதுகேட்ட அரசன் "பெண்ணணங்கே! கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று; அது அறநூல் விதித்த முறையாகும்" என்று மொழிந்தான். தனது கணவனைக் கள்வன் என்று காவலன் கூறிய கடு

மொழியைக் கேட்டுக் கண்ணகி உள்ளம் பொறு தவளாய் 'மதியிழந்த மன்னனே' என் கணவன் கள்வனே யல்லன்; அத்னே நீயும் இந் நாட்டா ரும் இப்பொழுதே அறியும்படி செய்வேன்" என்று உறுதியாகக் கூறினாள். இவ்வாறு மாது கூறிய மொழியைக்கேட்ட மன்னனும் மனங் கலங்கிக் கோவலனிடமிருந்து தன் காவலாளர் மூலமாய்ப் பெற்ற சிலம்பை ஓர் அறையினின் றும் எடுத்து வந்து அவள் முன்னே வைத் தான். அதைக் கண்ட கண்ணகி "இது என் சிலம்பே யாகும். இதன் உள்ளே யிருக் கும் பரல் மாணிக்கம்" என்றாள். அரசன் அச்சிலம்பைத் தன் சிலம்பென்று சொல்லி "அதன் உள்ளே யிருக்கும் பரல், முத்து" என்றான். உடனே கண்ணகி அச்சிலம்பை எடுத்துப் படீரென்று உடைத்தாள்; அதன் உள்ளே யிருந்த மாணிக்கம் வீறிட்டெழுந்து அரியாசனத்தில் அமர்ந்திருந்த மன்னனது வாயில் தெறித்தது! அம்மணியை மன்னவன் கண்டான். அரசநீதி தவறியதென்று அறிந் தான். உடனே அவனது வெண்குடை தாழ்ந் தது! செங்கோல் தளர்ந்தது! பொன் செய் கொல்லன் சொல்லைக் கேட்டு இழிசெயல் செய்த யானே அரசன்? யானே கோவலனது இன்னுயிரைக் கவர்ந்துகொண்ட கள்வன்

னேன்! இதுகாறும் எனது வழிமுறையில் நீதி தவறியதில்லை. நானே நீதி பிழைத்த பாவியேனு னேன்! இனி இவ்வுலகில் நான் உயிர் வாழ மாட்டேன்! என்று மொழிந்தான். அரியா சனத்தில் மயங்கி விழுந்தான். அங்கேயே உயிர் துறந்தான்.

இச்செயல் நிகழும் பொழுது கோப்பெருந் தேவி அரசன் அருகே நின்று கொண்டிருந்தாள். மன்னன் விழுந்ததைக் கண்டு மயங்கினுள். கண்ணகியின் கோலத்தைக் கண்டு கலங்கினுள். கற்புடைய தெய்வத்தின் கடுஞ்சினத்தை எவ்வாறு தணிப்பதென்று எண்ணி ஏங்கினுள். ஒரு வகையிலும் ஆறுதல் சொல்ல அறியாதவ ளாய்க் கண்ணகியின் கால்களில் விழுந்து வணங்கினுள். அப்பால் மயங்கி விழுந்துகிடந்த தன் மணுளனை முடிமுதல் அடிவரை மெதுவா கத் தொட்டுப்பார்த்தாள். 'அரசனது ஆவி அகன்றதென்று அறிந்தாள். அப்பொழுது கலக்கங் கொள்ளாது கடுந்துயர் பொருது தன் கணவன் சென்ற இடத்திற்குத் தானுஞ் செல்லத் துணிந்து, தன் உயிரைக் கொண்டு அவன் உயி ரைத் தேடுபவள் போல அரசனது அடிகளில் மயங்கி விழுந்து அரசமாதேவியும் மடிந்தாள்.

இவ்வாறு காதலன் இறந்த துயரம் பொருது உயிர் துறந்த கோப்பெருந்தேவியாரது

தலையாய கற்பின் தன்மையை அக்காலத்தில் வீரர் பெருமானாய் விளங்கிய சேரன் செங்குட்டுவனும் தமிழ் நாட்டு மக்களும் பலபடப் பாராட்டிப் போற்றினார்கள்.

"காதலர் இறப்பில் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிரீவர்"

என்று மணிமேகலை ஆசிரியர் கூறிய தலையாய கற்பிற்குக் கோப்பெருந்தேவியார் ஒப்பற்ற சான்றாக விளங்குகின்றார்.

---

# 5. மணிமேகலையார்

முன்னொரு காலத்தில் சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் கோவலன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் தனது கற்பிற்சிறந்த காதலியாகிய கண்ணகியைக் கைவிட்டு, மாதவி என்னும் பொது மகளது மாய வலையில் அகப்பட்டு அவளோடு மகிழ்ந்து வாழ்ந்துவந்தான். அவ்வாழ்க்கையில் சில ஆண்டுகள் செல்லு முன்னரே மாதவி அழகு மிகுந்த ஒரு பெண்மகவைப் பெற்றாள். அப்பிள்ளை பிறந்த பத்தாம் நாளில் அதற்கு என்ன பெயரிட்டு அழைக்கலாமென்று அதன் பெற்றோர் ஆலோசித்தார்கள். அப்பொழுது

கோவலன் முற்காலத்தில் தன் முன்னோரில் ஒருவர் கடலில் விழுந்து தத்தளித்தபொழுது, அவரைக் கரையேற்றி உய்வித்த மணிமேகலை என்னும் தெய்வத்தின் பெயரையே அப் பிள்ளைக்கு இடவேண்டுமென்று எண்ணினான். அவ்வாறே மாதவியின் மகள் மணிமேகலை யென்று பெயர் பெற்றாள்.

மணிமேகலை பாலப்பருவ முற்று வளர்மதி போன்று வளர்ந்து வருகையில் கோவலன் மாத வியைவிட்டுப் பிரிந்து தன் காதலியாகிய கண்ணகியோடு மதுரைமா நகர் அடைந்து, அங்கு அரசனது ஆணையால் அநியாயமாய்க் கொலையுண்டான். இவ்வாறு கோவலன் கொலை யுண்டிறந்த கொடுந் துயரம் பொறுக்கலாற்றா மல் மாதவி தனக்குரிய பொருளை யெல்லாம் தானம் செய்து துறவறம் பூண்டாள். தனது அரும்பெரும் புதல்வியாகிய மணிமேகலையையும் சிறுநெறியினின்றும் விலக்கி நன்னெறியில் செலுத்தக் கருதித் துறவற நெறியில் சேர்த் தாள். இருவரும் மூவகைப் பற்றையும் முற்றத் துறந்து அந்நகரிலிருந்த மலர் மண்டபத்தை அடைந்து அருந்தவம் செய்யத் தலைப்பட் டார்கள்.

இவ்வாறிருக்கையில் அந்நகரில் ஆண்டு தோறும் நிகழும் இந்திர விழா வந்துற்றது.

அவ்விழாவிற்கு மாதவியும் மணிமேகலையும் வழக்கம்போற் சென்று தமது ஆடல் பாடல் களை நிகழ்த்தி மகிழ்வியாத குறையை எண்ணி எண்ணி அந்நகரமக்கள் ஏங்கினார்கள். அதனை அறிந்த மாதவியின் நற்றாயாகிய சித்திராபதி தன்மகளது ஆருயிர்த் தோழியாகிய வசந்த மாலையை அருகே அழைத்து "நீ இப்பொழுதே மாதவியிடம் சென்று இவ்வூரார் படும் துய ரத்தை எடுத்து உரைத்து அவளையும் மணிமே கலையையும் எவ்வாறாயினும் இங்கு அழைத்து வா." என்றாள். அவ்வாறே வசந்தமாலை மணிமே கலையோடு மாதவியிருந்த மலர்மண்டபத்தை அடைந்து, அம்மாதரது வாடிய மேனி கண்டு உளம் வருந்தி ஊரார் படும் துயரத்தை எடுத் துரைத்தாள். அது கேட்ட மாதவி பெரிதும் மனங் கலங்கி "வசந்தமாலாய்! நீ மணிமேகலை யின் பெருமையை அறியாது பேசினாய். மதுரைமா நகரைத் தன் கற்பின் ஆற்றலால் எரித்த மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளே மணிமேகலை. அன்னவள் இனித் தவ நெறியிற் செல்லும் தகுதியுடையளே யன்றித் தீநெறியிற்செல்லும் திறத்தினள் அல்லள். நானும் அறவண அடிகள் என்னும் பெரியார் பால் அறவுரை கேட்டபின்னர் துறவற நெறியை மேற்கொண்டுள்ளேன். இம்மாற்

றத்தை எனது நற்றாயிடம் எடுத்துரைத்து அவளது சீற்றம் தணிப்பாயாக'' என்று மொழிந்தாள்.

இவ்வாறு மாதவியும் வசந்தமாலையும் பேசிக்கொண்டிருக்கையில் மணிமேகலை இறைவனை வழிபடும்பொருட்டு நறுமலர்மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள். கோவலன் மதுரைமா நகரில் கொலையுண்டிறந்த கொடுமையையும் அதனை அறிந்து கண்ணகி அடைந்த கடுந்துயரத்தையும் மாதவி சொல்லக் கேட்டபொழுது மணிமேகலை தன் செவ்வரிபடர்ந்த கண்களினின்றும் முத்துப்போன்ற கண்ணீர் சிந்தினாள். அம்மாது அழுத கண்ணீர் அவள் கையிலிருந்த நறுமலர் மாலையை நனைத்தது. அதனைக் கண்ட மாதவி மனம் குழைந்து மணிமேகலையின் கண்ணீரைத் தன் கைகளால் துடைத்து 'என் கண்ணே! உனது கண்ணீரால் பூமாலை புனித மிழந்தது. ஆகையால் நீ இப்பொழுதே நந்தவனம் சென்று புதுமலர் கொய்து வா'' என்று அன்போடு பணித்தாள். அப்போது அவளுடனிருந்த தோழியாகிய சுதமதி என்பாள் மணிமேகலையை அங்கு தனியாய் அனுப்ப மனமற்றவளாய்த் தானும் அவளுடன் செல்லப் புறப்பட்டாள்.

இருவரும் அரச வீதியின் வழியே சென்று

உவவனம் என்று பெயர்பெற்ற நறுமலர் நிறைந்த நந்தவனத்தின் உள்ளே சென்றார்கள். அங்கு பல நிறங்களோடு இலங்கிய அழகிய மலர்கள் நறுமணம் கமழ்ந்தன. நந்தவனத்தின் நடுவே ஓர் பளிங்கு அறை பாங்குற அமைந்திருந்தது. அத்தகைய உவவனத்தில் மணிமேகலை சுதமதியோடு மலர் கொய்து நின்றாள். அப்பொழுது மணிமேகலை மீது அருங்காதல் கொண்டிருந்த அரசிளங்குமரன் அவள் நந்தவனத்தில் சென்றதை அறிந்து அங்கு தன் தேரைச் செலுத்தி வந்தான். தேரோசைகேட்ட மணிமேகலை இடியோசை கேட்ட மயில்போல ஏங்கி நின்று, அத்தேர், தன்மீது காதல்கொண்ட அரசகுமாரனது தேரே யென்றுணர்ந்து பளிங்கு அறையினுள்ளே விரைந்தோடித் தாளிட்டுக் கொண்டாள். நந்தவனத்தின் உள்ளே வந்த அரசகுமாரன் தனியாய் நின்ற சுதமதியைக் கண்டு, "மணிமேகலை எங்கே" என்று வினவினான். அதற்குச் சுதமதி "அரசே! மணிமேகலை உனது கருத்திற் கிசையாள், அவள் முன் வினைப்பயனால் இவ்வுலகப்பற்றை அறவே துறந்து தவநெறியை மேற்கொண்டுள்ளாள்" என்று மொழிந்தாள். இதைக்கேட்ட அரசகுமாரன் மனம் நொந்து எவ்வாறாயினும் மணிமேகலையை என் கருத்திற்கு இசையுமாறு செய்

வேன் என்று வஞ்சினங்கூறி வெளியே சென்ருன்.

இவ்வாறு உதயகுமாரன் அகன்றபின், படங்கொண்ட பாம்பின் வாயினின்றும் தப்பிப் பிழைத்த தேரைபோல மணிமேகலை பளிங்கறையினின்றும் வெளியே போந்து தன் தோழியிடம் நிகழ்ந்த செயல்களைக் குறித்து உரையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது மாலை ஞாயிறு மறைந்து தண்மதியம் விண்ணிலே விளங்கித் தோன்றிற்று. நந்தனவனத்தில் உலாவிய மெல்லிய பூங்காற்ருல் மணிமேகலை ஒருவாறு மயக்கம் தீர்ந்தாள். அப்போது மின்னெளி போன்ற மேனியோடு திருமகள்போன்ற அழகினையுடைய ஒரு தெய்வமாது அவர்கள் முன்னே தோன்றி "நீங்கள் இங்குவந்த காரணம் என்னை?" என்று வினவினுள். சுதமதி நந்தவனத்தில் நடந்த செயல்களையெல்லாம் அம்மாதிடம் ஒன்றும் மறையாமல் எடுத்துரைத்தாள். அதுகேட்ட அம்மாது "அரசகுமாரன் மணிமேகலைமேற் கொண்ட மையல் மாண்டதென்று கருத வேண்டாம்; இது அறத்தோர் வாழும் வனம் என்றறிந்து இங்கு நின்றும் அகன்ருன். ஆயினும் மணிமேகலையைக் கைப்பற்றக் கருதி அவன் வெளியே காத்திருக்கின்ருன். ஆதலால் இப்பொழுது நீங்கள் வெளியே

செல்லாது இவ்வனத்திற்கு அருகேயுள்ள சக்கர வாளக் கோட்டம் சென்றால் அங்கு யாதொரு கவலையுமின்றி இராப்பொழுதைக் கழிக்கலாம்; அது மாதவர் விரும்பி உறையும் மணிக்கோட்ட மாகும்'' என்று மொழிந்து அக்கோட்டத்தின் வரலாற்றை மிக விரிவாக உரைக்கத் தொடங் கினாள். அக்கதையை இருவரும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருக்கையில் சுதமதி கண் ணயர்ந்து துயிலுற்றாள். பெண்ணுருவம் தாங்கி வந்து கதைசொல்லிக்கொண்டிருந்த மணிமே கலா தெய்வம் இதனை அறிந்து மணிமேகலையை எடுத்துக்கொண்டு அந்தரவழியாய் விரைந்து சென்று மணி பல்லவம் என்னும் தீவில் ஒரு சோலையின்கண் வைத்துவிட்டு மறைந்தது. அப்பொழுது மணிமேகலை தூக்க மயக்கமுற் றிருந்தாள். துயிலொழிந்து எழுந்ததும் முன் கண்டறியாத வண்டறை சோலையும், ஆம்பலும் குவளையும், அலர்ந்த வாவியும் மணிமேகலை கண்டு மயங்கிச் சுதமதியைக் காணாது கலங்கி னின்றாள். சோலையில் பல இடங்களிற் சென்று தேடியும் தன் தோழியைக் காணாமையால் மணிமேகலை மனம் வெதும்பி, உளம் கலங்கிக் கண்ணீர் பெருக்கினாள்.

இவ்வாறிருக்கையில் அச்சோலையில் அவள் கண்ணெதிரே கதிர்மணி போன்ற புத்த தேவ

னது பாதங்கள் இலங்கக் கண்டாள். அவ்வழகிய திருவடிகளை மணிமேகலை மும்முறை வலம் வந்து தொழுது நின்றாள். அப்பொழுதே அம்மாது தன் முற்பிறப்பின் வரலாறு முழுமையும் அறிந்தாள். மணிமேகலா தெய்வமும் விண்ணினின்றும் வந்து புத்த தேவனது பாதம் பணிந்து அப்பெருமான் மீது புகழ்மாலை பாடி நின்றது. அத்தெய்வம் மணிமேகலையைக் கண்டு, மனம் மகிழ்ந்து அவளது உயரிய அறநெறியை மேன்மேலும் வளர்க்கக் கருதி மூன்று அரிய பெரிய மந்திரங்களை அவளுக்கு அறிவித்து மறைந்தது. அம் மந்திரங்களின் ஆற்றலால் மணிமேகலை அந்தர வழியே பறந்து செல்லும் அருந் திறமையையும் வேண்டிய பொழுது வேற்றுருக் கொள்ளும் வன்மையையும் பசிப்பிணியால் நலியாத பான்மையையும் பெற்றாள்.

மணிமேகலா தெய்வம் நீங்கிய பின்னர், மணிமேகலை மணி பல்லவத்திலுள்ள வெண் மணற் குன்றையும் விரிபூஞ் சோலையையும் தண் மலர்ப் பொய்கையையும் கண்டு களித்தாள். அப்பொழுது தெய்வ ஒளியோடிலங்கிய தீவதிலகை யென்னும் மாது மணிமேகலை முன்னே தோன்றி அவள் வரலாற்றை அறிந்துகொண்டு, அருகே யிருந்த ஓர் அழகிய பொய்கையிடம் அழைத்துச் சென்று அதன் அழகையும் அமைப்

யையும் எடுத்துரைத்து "மாதே! இப் பொய்கையில் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நன்னாளில் அமுத சுரபி என்னும் அழகிய பாத்திரம் நீரின் மேற்புறம் மிதந்து தோன்றும். அப் பாத்திரம் அன்பும் அருளும் வாய்ந்த அறவோர் கையிலேயே சென்று சேரும். அவ்வமுத சுரபியில் நல்லோர் கையால் அன்னம் அளிக்கப் பெற்றால் அது அள்ள அள்ளக் குறையாமல் வளர்ந்து கொண்டேயிருக்கும். அந் நன்னாள் இந்நாளேயாகும்" என்று அருளோடு மொழிந்தாள். அப்பொழுதே அமுதசுரபியும் நீரின்மேல் மிதந்து தோன்றி, காந்தத்தின் வயப்பட்ட இரும்பு போல மணிமேகலையின் கையகம் சேர்ந்தது. இதைக்கண்ட தெய்வமாது மணிமேகலையின் உயரிய குணங்களை உள்ளங்கொள்ளப் புகழ்ந்து, அமுத சுரபியின் அரும் பெரும் தன்மையை எடுத்துரைத்து மறைந்தாள். மணிமேகலையும் மணிபல்லவத்தினின்றும் பறந்து சென்று, காவிரிப்பூம் பட்டினத்தில் தன் தாயும் தோழியும் தவம் செய்து கொண்டிருந்த மலர் மண்டபத்தை அடைந்தாள். அங்கு மழை முகம் காணாத பயிர்போல் வாடியிருந்த மாதரது மனக்கவலையை மாற்றித் தான் மலர் கொய்யச் சென்ற வனத்தினின்றும் மணிபல்லவம் அடைந்ததும், அங்குப் புத்தபாதம் பணிந்து

மந்திரம் பெற்றதும், அப்பால் ஆருயிர் மருந் தளிக்கும் அமுத சுரபியை அடைந்ததும் ஆகிய வரலாற்றை யெல்லாம் மணிமேகலை விரிவாக எடுத்துரைத்தாள்.

அப்பொழுது அந்நகரத்தில் காயசண்டிகை என்னும் ஒரு மாது யானைத்தீ யென்னும் தீராப் பசியால் துயருற்று நலிந்து வருந்தினுள். மணி மேகலை அமுதம் சுரக்கும் பாத்திரம் பெற்ருள் என்று அம்மாது கேள்வியுற்று அளவிலா மகிழ் வெய்தி அவளிடம் சென்று தன் குறையை முறையிட்டாள். உடனே மணிமேகலை அமுத சுரபியை அங்கையில் ஏந்திப் பிச்சைக் கோலங் கொண்டு, காயசண்டிகையோடு வீதியின் வழியே புறப்பட்டாள். இவ்வாறு செல்லும் பொழுது மணிமேகலையின் கோலத்தைக் கண்ட மக்கள் எல்லாம் மனம் வாடி வருந்தினுர்கள். அவ்வீதியில் கற்பின் நலத்தால் ஒப்புயர்வற்று விளங்கிய ஆதிரை என்னும் நல்லாளது திரு மனை அமைந்திருந்தது. அதன் அருகே வந்த பொழுது காயசண்டிகை, மணிமேகலையிடம் அம்மனையைக் காட்டி "அருந்தவமாதே! இது ஆதிரையின் திருமனையாகும்; அம்மங்கையின் கையால் முதலில் அன்னம் பெறுவது முறை யாகும்" என்று மொழிந்தாள். அது கேட்ட மணிமேகலை ஆதிரையின் மனையகம் புகுந்து,

வாயிலின் முன்னே அமுத சுரபியை அங்கையி லேந்திச் சித்திரப் பாவைபோல நின்ருள். இதைக்கண்ட ஆதிரை அளவிலா மகிழ் வடைந்து மலர்முகங் காட்டி, மணிமேகலையை மும்முறை வலம் வந்து தொழுது தனது இனிய மொழிகளால் " பாரகம் முழுவதும் பசிப்பிணி யறுக" என்று வாழ்த்தி அமுத சுரபி நிறைய அன்னம் அளித்தாள்.

அவ்வன்னம் நல்லார் கைப்பட்ட செல்வம் போல அள்ள அள்ளக் குறையாமல் வளர்ந்து பொங்கிற்று. மணிமேகலை அவ்வன்னத்தை வழங்கிக் காயசண்டிகையின் தீராப்பசியைத் தீர்த்தாள். அப்பால் அந்நகரிலிருந்த பேரம் பலத்தை அடைந்து, அங்குப் பசியால் வருந்திய ஏழை மக்களைக் கூவி அழைத்து நாள்தோறும் அன்னமளித்து வந்தாள். இதனுல் அந்நகரில் பசியால் நலிந்து வருந்துவோர் எவருமின்றி ஊண் ஒலி ஓடுங்கிற்று. ஒரு நாள் மணிமேகலை அரசனது சிறைக்கோட்டம் புகுந்து அங்கு வயிருர உணவு பெருது வருந்தியிருந்த சிறை வாசிகளுக்கெல்லாம் அமுத சுரபியினின்றும் அன்னம் வழங்கி, அவர்களை இன்புறச் செய் தாள். அப்புதுமையைக் கண்ட சிறைக்கோட் டக் காவலாளர்கள் அரசனிடம் சென்று அறி வித்தார்கள். அரசனும் அம்மாதைத் தன்

முன்னே கொண்டுவரும்படி ஆணை செய்தான் மணிமேகலையும் அரசனது ஆணையை ஏற்று அவன் முன்னே சென்று அமுதசுரபியின் அரும் பெருந் தன்மையை எடுத்துரைத்தாள். அதைக் கேட்ட அரசனும் வியப்படைந்து. மாதே, உனது அருள் நிறைந்த மனப்பான்மையை நான் மிகப்போற்றுகின்றேன். உனது விருப்பத்தை நிறைவேற்றச் சித்தமாயிருக்கின்றேன் என்றான்! அப்பொழுது மணிமேகலை வணங்கி அரசே, "இச்சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்க வேண்டுமென்று வேண்டினாள். அரசனும் அவ்வேண்டுகோளுக் கிசைந்து சிறைச்சாலையில் அடைபட்டிருந்த குற்றவாளிகளை விடுதலை செய்து சிறைச்சாலையை இடித்து அவ்விடத்தில் அறச்சாலையை அமைத்தான். அன்று முதல் அவ்விடம் மாதவர் வாழும் மன்றமாய் விளங் கிற்று.

இஃதிவ்வா றிருக்கையில் மணிமேகலை, தன் மரபிற்குரிய நெறியில் நில்லாது தவக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு மனம் வருந்திய சித்தி ராபதி அரசகுமாரனிடம் சென்று "ஐயனே! அரசவண்டு நுகர்தற்குரிய ஓர் அழகிய மலர் இங்கர் அம்பலத்தின் கண்ணே இலங்கித் தோன்றுகின்றது" என்று மிக ஆர்வத்தோடு கூறினாள். அரசிளங்குமரனும் அம்மொழிகளின்

உட்கருத்தை உணர்ந்து "மாதே! அம்மலர் சுரும்பு மூசாச் சுடர்ப் பெரும் பூவாய் விளங்கு கின்றதே; அன்றியும் அம்மாது தவநெறியில் செல்லும் தன்மைவாய்ந்தவளென்று ஓர் தெய் வம் அன்று உவவனத்தில் என்னிடம் கூறி மறைந்தது; ஆதலால் நான் மணிமேகலை மீது காதல் கொண்டிருப்பதால் யாது பயன்?' என்று கூறினன். இதைக்கேட்ட சித்திராபதி சிறிது மனங்கலங்கி அரசே! கன்னிப் பருவத்தில் காவலும் மணப் பருவத்தில் காவலும் அப்பால் கைம்மைக் காலத்தில் காவலும் உடையவர்க ளாய்க் கொண்டாரே தெய்வமெனக்கொண்டு ஒழுகும் குலமக்கள் மரபில் மணிமேகலை பிறந்த வள் அல்லள். அரங்கத்திலேறி, ஆடவர் களிக் கும்படி ஆடலும் பாடலும் அழகும் காட்டிக் கண்டோர் நெஞ்சங் கவர்ந்து அவரைத் தம் கண் வலையாற் பிணிக்கும் பொது மாதரை உரிய நெறியில் நிறுத்தல் அரசனது கடமையன்றோ என்று மொழிந்தாள். அம்மொழிகளைக் கேட்ட பொழுது உதய குமரனது உள்ளம் பிறழ்ந்தது. உடனே தன் தேர் மீதேறி மணிமேகலையைக் கவர்ந்து வரும் பொருட்டு அம்பலத்தை நோக் கிப் புறப்பட்டான். மணிமேகலை எப்பொழு தும்போல் பிச்சைக்கோலம் தாங்கி, அமுத சுரபி யைக் கையிலேந்தி அம்பலத்தில் நிறைந்து நின்ற வறியார்க்கு அன்னம் வழங்கிக்கொண்டிருந்

தாள். அரசகுமாரன் அவள் முன்னே சென்று மாதே! இளமையிலேயே நீ தவ ஒழுக்கம் பூண்ட காரணம் என்னை ? என்று வினவினான். அவ்வரச குமாரன் முற்பிறப்பில் தன் காதலனாய் அமைந்திருந்தானென்று மணிமேகலை அறிந்திருந்தமையால் அவன் அடி தொழுது "அரசே! இவ்வுலகின் நிலையாமை கண்டு, நல்லறமே உயிர்க்கு உறுதி பயக்கும் என்றறிந்து இத்தவ நெறியை மேற்கொண்டேன். அறிவிற் சிறந்த அரசர் பெருமானாகிய உமக்குப் பேதைப் பெண்ணாகிய நான் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்று கூறி அருகேயிருந்த ஓர் அறையில் சென்று மந்திர வலிமையால் தன் இயற்கை உருவத்தை மாற்றிக் காயசண்டிகையின் வடிவு பூண்டு, அமுத சுரபியைக் கையிலேந்தி வெளியேவந்தாள். மணிமேகலை மறைந்ததையும் காயசண்டிகையின் கையில் அமுத சுரபி அமைந்திருப்பதையும் கண்ட உதயகுமாரன் மணிமேகலை மாயத்தால் மறைந்தாள் என்று எண்ணி அவ்வம்பலத்தில் அமைந்திருந்த தெய்வத்தினிடம் எவ்வாறாயினும் மணிமேகலையை இங்குவிட்டு நான் தனியே செல்லேன் என்று வஞ்சினங் கூறினான். அத் தெய்வம் இளவரசே! "நீ, வீணே சபதம் செய்தாய். உன் எண்ணம் முற்றுப் பெறாது" என்று

மறைந்து நின்று ஒலித்தது. இதைக் கேட்ட உதயகுமாரன் மனங் கலங்கித் தன் மாளிகையை அடைந்தான்.

உதயகுமாரன் அப்போது அகன்றுனயி னும் அவன் தன்மேல் கொண்ட காதல சிறி தும் தணிந்திலது என்று அறிந்த மணிமேகலை காயசண்டிகையின் வேடம் பூண்டிருத்தலே நலமென்று கருதி அவ்வாறே அம்பலத்தில் விளங்கினுள். யானைத் தீயால் வருந்திய காய சண்டிகை பசி நோய் தீர்ந்ததும் மணிமேகலை யிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் நாட்டை நோக்கிச் சென்றுள். ஆனுல் அம்மாது தன் ஊருக்குப் புறப்பட்டு வருவதை அறியாத அவள் கணவனுகிய காஞ்சனன் தன் காதலி யைத் தேடிக்கொண்டு வேறு வழியாகக் காவி ரிப்பூம் பட்டினம் வந்து சேர்ந்தான். அந்நகரத் தில் மாதவரிடங்களிலும், மன்றங்களிலும், பொதியிலும், பூதசதுக்கத்திலும், பூமலர்ச் சோலையிலும் காயசண்டிகையைத் தேடிக் காணுது, அம்பலம் புகுந்து அங்கு கையில் பாத்திரம் ஏந்தி நின்ற தன் காதலியின் உருவத் தைக் கண்டான். அப்பொழுது உதயகுமாரன் அம்மாது மணிமேகலையே யென்றறிந்து அவள் அருகே சென்றுன். அரசகுமாரனைப் பார்த்து மணிமேகலை ஐயனே!

"பூவினும் சாந்தினும் புலால் மறைத்து யாத்துத்
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனே!"

என்று யாக்கையின் இழிவை எடுத்துரைத்தாள். இம்மொழிகளை நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்த காஞ்சனன் தன் காதலி தன்னை மறந்து மற்றொருவனை காதலித்தாள் என்று கருதினான். உடனே அவன் உள்ளத்தில் கடுஞ்சினம் மூண்டு எழுந்தது. ஆயினும் சீற்றத்தை உள்ளடக்கிப் புற்றில் அடங்கி நிற்கும் அரவம் போல அவன் அம்மன்றத்தில் மறைந்திருந்தான். மணிமேகலையின் உயரிய மொழிகளைக் கேட்ட உதயகுமரனும் அப்பொழுது தன் மாளிகைக்குத் திரும்பிச் சென்று அன்றிரவில் மறுபடியும் அம்பலம் புகுந்தான். இவ்வாறு உதயகுமரன் வருவான் என்று எதிர் பார்த்திருந்த காஞ்சனன் வேக நாகம் போல வெகுண்டெழுந்து அரசகுமரனது தலை அற்று விழும்படி தன் வாளால் எறிந்தான். அரசகுமரன் கொலையுண்டிறந்ததைக் கண்ட மணிமேகலை மயங்கி விழுந்தாள். இதைக் கண்ட காஞ்சனன் அம்மாதைத் தன்னோடு எடுத்துச் செல்லக் கருதி அவள்பால் அணுகினான். அப்பொழுது அங்கிருந்த ஒரு தெய்வம் "காஞ்சனனே! அவளை அணுகாதே, அணுகாதே;

அவள் உன் மனைவி யல்லள் ; மணிமேகலையே அவ்வடிவு பூண்டு நின்றாள் ; உன் காதலி கடும் பசி நீங்கி, உனது நகர் நோக்கிச் செல்லும் பொழுது விந்த மலையில் உறையும் ஓர் அந்தரி கையில் அகப்பட்டு அதன் வயிற்றில் அடங்கினாள் ; இதனை அறியாது நீ உதயகுமரனைக் கொன்ற தீவினை உன்னை விட்டகலாது" என்று அசரீரியாய் ஒலித்தது. இதைக்கேட்ட காஞ்சனன் அஞ்சிக் கலங்கி அம்பலத்தினின்றும் வெளியே சென்றான்.

பின்னும் சிறிது நேரத்தில் மணிமேகலை மயக்கம் தெளிந்து குருதியில் படிந்து கிடந்த அரசகுமாரனைக் கண்டு, மனம் வருந்தி ஏங்கிப் புலம்பி அழுதாள். அவ்வழுகையைக் கண்டு ஆற்றாத கந்திற் பாவை என்னும் தெய்வம் முன் வினைப் பயனை எடுத்து மொழிந்து, உதயகுமரன் முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனை இப் பிறப்பில் அடைந்தான் என்று மணிமேகலைக்கு ஆறுதல் கூறி அவள் மனவாட்டம் திருத்தியது.

அரசகுமாரன் வெட்டுண்டு கிடந்ததைக் கண்ட அம்பலத்தில் வாழ்ந்த மாதவர் அச்செயலை அரசனிடம் அறிவிப்பதற்காக அரண்மனை சென்றார்கள். அரசனும் மாதவர் மொழிந்த மாற்றம் கேட்டுத் தன் மகன் நீதி தவறிய நிலைமையை நினைந்து மனம் வருந்தி மாதவரைப் பார்த்து,

அறிவால் சிறந்த அருந்தவத்தோரே! "என் முன்னோர் பசுவின் கன்றைக் கொன்ற தம் மகனைக் கொன்று நீதி போற்றினார்கள். அத் தகைய நீதிவழுவாத வழி முறையில் இத்தீவினை யாளன் தோன்றினான் என்று அயலார் எவரும் அறியு முன்னரே அவனுடம்பினை எரியினுக்கு இரை யாக்குக. நீதி தவறிய என் மகனை நானே என் கைவாளால் கொன்று முறை செய் திருப்பேன். நான் செய்தற்குரிய செயலைக் காஞ்சனன் செய்து முடித்தான். அரசாங்க பாரம் தாங்கிக் குடிகளின் நலத்தைப் போற்று தற்குரிய அரச குமாரனே இத் தீச் செயல் செய்வானாயின் நாட்டில் எவ்வாறு மாதவர் நோன்பும், மடவார் கற்பும் நிலை பெறும்? என்று கூறிக் காவலாளரைப் பார்த்து அதற்கெல்லாம் காரணமாயிருந்த கணிகை மகளாகிய மணி மேகலையைச் சிறைச்சாலையில் அடைத்துக் காவல் செய்மின்" என்று பணித்தான்.

உதய குமாரன் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறைச்சாலை புகுந்ததையும் அறிந்த அரசனது தேவியாகிய இராசமாதேவி மணி மேகலைமீது ஆற்றொணாச் சீற்றம் கொண்டாள். தன் மகன் கொலையுண்டு இறந்ததற்குக் காரணம் மணிமேகலையே என்று துணிந்து அவளைப் பல வாறு துன்புறுத்தக் கருதினாள். ஒரு நாள் அரச

னிடம் சென்று "அரசே! தன் இளமைதுறந்து தவக்கோலம் கொண்டு மாசிலாததன்மை வாய்ந்து விளங்கும் மணிமேகலைக்குச் சிறை வாசம் ஏற்றதன்று" என்று அவள்பால் பரிந்து பேசு பவள் போல நயவஞ்சகமாகக் கூறினாள். அரச மாதேவியின் உட்கருத்தை உணராத அரசன் மணிமேகலையைச் சிறையினின்றும் விடுவித்து அரண்மனையிலேயே அமர்ந்திருக்குமாறு ஆணை செய்தான். இவ்வாறு தன் காவலில் அம்மாது அமைந்தபொழுது அரசமாதேவி அவளைப் பல வாறு துன்புறுத்தத் தொடங்கினாள். மணிமேகலை பித்தம் பிடித்தவள் என்று எல்லோரும் இகழு மாறு அறிவை மயக்கும் மருந்தை அரசமாதேவி அவளுக்கு ஊட்டினாள். ஆனால் மணிமேகலை மறுமையும் உணரும் மாசிலா அறிவு பெற்றி ருந்தமையால் அம்மருந்தால் சிறிதும் மயக்க முறாதிருந்தாள். அமணர்கள் அப்பர் பெருமா னுக்கு அளித்த நஞ்சும் அவருக்கு அமுதமாயி னாற்போல மணிமேகலைக்கும் அரசமாதேவியின் மருந்து அமுதமாகவே அமைந்தது. தான் இட்ட மருந்தால் தன் எண்ணம் முற்றுப்பெறா தது கண்ட அரசமாதேவி மணிமேகலையைக் கொல்வதற்கு மற்றொரு சூழ்ச்சி செய்தாள். மணிமேகலை மானமே உயிரினும் மாண்புடைய தென்று கருதும் தன்மை வாய்ந்தவள் என

றறிந்த அரசமாதேவி அவளது கற்பில் களங்கம் கற்பிக்கக் கருதினுள். அரண்மனையில் குற்றேவல் செய்துகொண்டிருந்த ஓர் அறிவிலியை அழைத்து அவன் கைநிறையப் பொன்னும் மணியும் கொடுத்து நீ எவ்வாருயினும் மணிமேகலையின் கற்பினை அழித்து அதனை இவ்வூரார் அனைவரும் அறியுமாறு செய்யவேண்டும் என்று அரசமாதேவி ஆணை செய்தாள். அறிவற்ற அவ்வாண் மகனும் அப்பணியையும் மணியையும் ஏற்றுக்கொண்டு, மணிமேகலை தங்கியிருந்த அந்தப்புரத்துக்குச் சென்றுன். அவன் செல்லுமுன்னரே அச்சூழ்ச்சியைத் தன் ஞானத்தால் அறிந்த மணிமேகலை தன் பெண்ணுருவை மாற்றி ஆண் உருவம் பூண்டு அங்கேயிருந்தாள். அந்தப்புரத்தில் மணிமேகலையைக் காணுது ஒரு ஆடவனைக்கண்ட அறிவிலி நடுநடுங்கி நெஞ்சம் பதைத்து ஐயோ! அரசனது அந்தப்புரத்தில் ஆடவர் எவரும் அணுகாரே! இது என்ன மாயமோ? அரசமாதேவியின் தீய கருத்து யாதோ என்று அஞ்சி நடுநடுங்கி அப்பால் ஓடிப்போயினன். இச்சூழ்ச்சியும் பயனற்றதென்றறிந்த அரசமாதேவி மணிமேகலையைப் பசி நோயால் கொல்லக் கருதினுள். மணிமேகலை பிணியுற்று வருந்துகின்ருளென்றும், அவளுக்கு உணவு செல்லவில்லையென்றும் அரண்மனையிலுள்ளார் அனை

வரும் அறியுமாறு பறை சாற்றி, அவளை ஒரு தனி அறையில் அடைத்து வைத்தாள். ஆனால் அத்தவமாது, பசிநோய் நீக்கும் மந்திரம் உடையவளா யிருந்தமையால் அம்மந்திரத்தையே உருச்செய்து சிறிதும் வாட்டமின்றி யிருந்தாள். இப்புதுமையைக் கண்ட அரசமாதேவி, மணிமேகலையைத் தெய்வ மாதென்று அஞ்சி நடுங்கி, அவள் அடியிணை தொழுது அம்மையே! உனது பெருமையை அறியாது உனக்குத் தீங்கிழைத்த எனது சிறுமையைப் பொறுத்தருளல் வேண்டும். என் மகனுக்குற்ற இடுக்கண் பொருது இச்சிறு செயல்களைச் செய்துவிட்டேன். இப்பொழுது என் நெஞ்சே என்னைச் சுடுகின்றது என்று மனங்கரைந்து மொழிந்தாள். இதைக் கேட்ட மணிமேகலை உதய குமரன் முன் வினைப்பயனால் கொலையுண்டு இறந்த வரலாறு முழுமையும் எடுத்துரைத்து நல்லறமே செய்யவேண்டுமென்று வற்புறுத்தினாள். அவ்வறவுரை கேட்ட மன்னவன் தேவியும் மனம் தெளிந்து மணிமேகலையின் அடிகளில் வீழ்ந்து தொழுதாள். முற்பிறப்பில் தன் காதலனை ஈன்ற தாயாகவும் இப்பிறப்பில் தனது காவலனது பெருந்தேவியாகவும் விளங்கிய இராசமாதேவி தன்னைத் தொழுவது எவ்வகையிலும் தகுதியன்று என்று எடுத்துரைத்து மணிமேகலையும் அவளை எதிர் வணங்கினாள்.

இவ்வாறிருவரும் அரண்மனையில் வாழ்ந்து வருகையில் மணிமேகலை அரசனால் சிறை செய்யப்பட்டாள் என்றறிந்த மாதவி அறவண அடிகளை அழைத்துக்கொண்டு சிறைமீட்கும் பொருட்டு அரண்மனைக்கு வந்தாள். இவர்களைக் கண்ட இராசமாதேவி எழுந்து எதிர் நின்று அறவண அடிகளை வணங்கினாள். அடிகளும் அரசனது தேவிக்கு அறவுரையை அருளிச்செய்து மணிமேகலை சிறையினின்றும் முன்னரே விடுதலை பெற்றதை அறிந்து, அரண்மனையினின்றும் புறப்பட்டார். இவ்வாறு அடிகளும் மாதவியும் அகன்ற பின்னர் மணிமேகலை இராசமாதேவியை நோக்கி, "அம்மையே! நான் இந்நகரில் இருப்பேனாயின் உதய குமரனுக்கு இவள் கூற்றாயிருந்தாளென்று எல்லோரும் என்னை இகழ்ந் துரைப்பார்கள். ஆகையால் இந்நகரினின்றும் நான் நீங்குவதே நலமாகும்" என்று கூறி அவளிடம் விடைபெற்றுக் கொண்டு, ஆகாய வழியே பறந்து சென்று நாகபுரம் என்னும் நாட்டை அடைந்தாள். அந்நாட்டை அறமே உருக்கொண்டு வந்தாற் போன்ற புண்ணியராசன் என்பான் அரசாண்டு கொண்டிருந்தான். மணிமேகலை அவனைக் கண்டு மணிபல்லவத்தின் சிறப்பையும் அங்கு இலங்கும் புத்த பாதத்தின் பெருமையையும்

இனிது எடுத்துரைத்தாள். அரசனும் அப்பொழுதே புறப்பட்டுக் கடற்கரை சென்று நாவாய் ஏறி மணிபல்லவத்தை அடைந்தான். மணிமேகலையும் ஆகாயவழியே அங்கு வந்து சேர்ந்தாள். இருவரும் புத்த பாதத்தைக் கண் குளிரக்கண்டு வணங்கினார்கள். அப்பால் புண்ணிய ராசனிடம் விடைபெற்றுக்கொண்டு, மணிமேகலை வஞ்சிமா நகரம் சென்றாள். அங்கு கண்ணகி கோவிலை அடைந்து பத்தினிக் கடவுளை வணங்கித் துதித்து அப்பால் பல திறப்பட்ட சமயவாதிகள் மதக்கொள்கைகளைக் கேட்டுத் தெளிந்து காஞ்சிமா நகரம் புகுந்தாள். அங்குப் பல ஆண்டுகள் மழையில்லாமல் உயிர்கள் எல்லாம் வறுமையால் வருந்தி வாடினார்கள். அவர்கள் மணிமேகலையைக் கண்ட பொழுது தாய் முகம்கண்ட தனி யிளங்குழவி போல இன்புற்று மகிழ்ந்தார்கள். அம்மாதின் வருகையைக் கேட்ட மன்னவனும் அவள் தங்கியிருந்த வனத்திற்குச் சென்று அன்புடன் வரவேற்றான். மணிமேகலை அமுத சுரபியினின்று அன்னம் வழங்கி அந்நகரில் நிலைத்திருந்த பசிப்பிணியை மாற்றினாள். அப்பொழுது வானவர் மலர்மாரி பொழிவதைப் போன்று மேகம் விண்மாரி பொழிந்தது. நாட்டில் வளம் மிகுந்து வறுமை அகன்றது. அக்காலத்தில் அறவண அடிகள்

அந்நகரத்துக்கு எழுந்தருளினார். அப்பெரியாரைக் கண்ட மணிமேகலை அவர் பாதம் பணிந்து நின்றாள். அறவண அடிகளும் மணிமேகலையின் மனப் பக்குவத்தை அறிந்து பௌத்த சமயம் விதித்த உயரிய அறங்களை அவள் உள்ளம் கொள்ள எடுத்துரைத்து ஞானச்சுடர் விளக்கினார். மணிமேகலை அடிகள் வகுத்துரைத்த அறநெறியில் நின்று தவம் செய்து என்றும் நீங்காத இன்பப்பேறு எய்தினாள்.

## 6. கண்ணகியார்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளை
தெய்வம் தொழும் தகைமை திண்ணமால்"
—சிலப்பதிகாரம்.

முன் ஒருகாலத்தில் காவிரிப்பூம் பட்டினம் என்று சிறப்புப் பெயர்பெற்ற புகார் நகரம் சோழ நாட்டின் தலை நகரமாய்த் திகழ்ந்தது. அந்நகரத்தில் மாசாத்துவான் என்னும் ஓர் வணிகன் இருநிதிச் செல்வனாய் வாழ்ந்து வந்தான். அந்நகரிலேயே மாநாய்கன் என்னும் மற்றொரு வணிகனும் சீரும் திருவும் திகழ்ந்து வாழ்ந்தான். மாசாத்துவானுக்குச் செவ்வேள் போன்ற செம்மைவாய்ந்த கோவலன் என்பான் மகனாய்த் தோன்றிப் பதினாறாண்டு அமைந்த

இளைஞனாய் விளங்கினான். மாநாய்கன் என்னும் வணிகன் கண்ணகி என்னும் பூங்கொம்பு போன்ற ஒரு பெண் மகவைப் பெற்று அம் மங்கையைத்தன் உயிரினும் அருமையாய்ப்போற்றி வளர்த்து வந்தான். இவ்வாறு குலத்தாலும் நலத்தாலும் அறிவாலும் பொருளாலும் ஒத்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் மனம் ஒத்து இல்லறமென்னும் நல்லறத்தைச் சில ஆண்டுகள் இனிது நடத்தினார்கள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் அரசனது அரண்மனையில் மாதவி யென்னும் நாடகமாது தான் கற்றுத் தேர்ந்த ஆடல் பாடல்களை அரங்கேற்றினாள். அவ்வரங்கேற்று விழாவிற்கு அரசன் கோவலனையும் அழைத்திருந்தான். கோவலனும் அன்று அரண்மனைக்குச் சென்று மாதவியின் மாந்தளிர்போன்ற மேனியையும் மயில் போன்ற மெல்லிய சாயலையும் கண்டு அவள் மாயவலையில் அகப்பட்டான். ஆடல் பாடல் முடிந்தவுடன் அரசன் மாதவியின் இசைத் திறமையை வியந்து ஆயிரத்து எண் கழஞ்சு பொன்னும், அழகிய பச்சை மாலையும் பரிசாகக் கொடுத்தான். அரசன் அளித்த பரிசை ஆர்வத்தோடு பெற்றுக்கொண்டு, மாதவி தன் மனை சேர்ந்தாள். அரச சபையினின்றும் நீங்கிக்

கோவலன் தன் வீடு சேர்ந்ததும் மாதவியின் எழிலுருவத்தையே தன் உள்ளத்தில் அழ கொழுக எழுதிப் பார்த்து ஆனந்தவாரியில் திளைத்திருந்தான். மறுநாட்காலையில் மாதவி தன் தோழியாகிய வசந்தமாலையை அழைத்து அவள் கையில் பச்சை மாலையைக் கொடுத்து, "இதனை நீ வீதியின் வழியே கொண்டு செல்வா யாக; செல்லும்போது இதன் பெருமையை அறிந்து விலைகொடுத்து வாங்குபவனே என் காதலன் ஆவான். அவனை உன்னோடு அழைத் துக் கொண்டு வா" என்றாள். அவ்வாறே வசந்தமாலை பச்சை மாலையைக் கையிலேந்தி வீதியின் வழியே செல்லும்பொழுது கோவலன் அதனைக் கண்ணுற்று, அது மாதவியின் மண மாலை யென்று அறிந்து அளவிலாக் காதல் கொண்டு ஆயிரத்து எண் கழஞ்சு பொன் கொடுத்து அம்மாலையை வாங்கி, வசந்தமாலை யோடு மாதவி மனையில் சேர்ந்தான். அங்கு அம்மாதினை மணந்து அவள் மையலிலே தாழ்ந்தான்.

தன் கணவனைக் காணாத கண்ணகி கவலைக் கடலுள் மூழ்கினாள். அவளது கருங் கூந்தல் நறுமலர்மாலையை மறந்தது. செங்கயல் நெடுங் கண் அஞ்சனம் மறந்தது. திருந்திய திருநுதல் திலகம் இழந்தது. கொவ்வைச் செவ்வாய் குறு

நகை இழந்தது. மங்கல அணியை அன்றி மற்றைய அணிகளை மறந்தாள். இவ்வாறு கண்ணகி சோகமுற்றுப் பிரிவாற்றாமையால் ஊண் உறக்கமற்று வாடி வருந்தினாள்.

கோவலன் மாதவி மனையில் மகிழ்ந்து வாழ்ந்து திருமகள்போன்ற ஒரு அழகிய பெண் மகவைப் பெற்று அதற்கு மணிமேகலை என்று பெயரிட்டு, அக்குழவியின் தளர் நடையைக் கண்டும், மழலை மொழிகளைக் கேட்டும் களிப்புற்று வாழ்ந்தான். இவ்வாறு கோவலனும் மாதவியும் மலரும் மணமும் போலப் பிரியாது வாழ்ந்து வருகையில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா வந்துற்றது. அப்போது மாதவி நல்ஆடை அணிகளால் தன் அழகுக்கு அழகு செய்து விழாக்காண வந்திருந்த அந்நகர மக்கள் எல்லாம் கண்டு களிக்கும்படி ஆடல் பாடல்கள் நிகழ்த்தினாள். திருநாள் முடிந்த மறுநாள் அமாவாசை நாளாய் அமைந்திருந்தமையால் அந்நகர மக்களெல்லாம் கடலில் நீராடும் பொருட்டுக் குழாங் குழாமாய்ச் சென்றார்கள். அதைக்கண்ட மாதவி, தானும் தன் காதலனோடு கடற்கரைக்குச் சென்று களிக்கக் கருதினாள். அவ்வாறே நன்னீரில் மூழ்கி நலங்கொள் பூம் பட்டணிந்து, கோவலனோடு கடற்கரை சேர்ந்தாள். அங்கு மெல்லிய பூங்காற்றின் இன்பத்தை நுகர்ந்து அழகிய

வெண்மணல்மீது இருவரும் இனிதமர்ந்திருக் கையில் மாதவி தனது மகரயாழைத் திருத்திக் கோவலன் கையிற் கொடுத்தாள். அவனும் யாழைக் கையிலேந்தி அக்காலத்திற்கு ஏற்ற கானல் வரிப்பாக்களைப் பாடத் தொடங்கினன். அவ்வாறு பாடும்பொழுது மாதவி குறிப்பாய்க் கவனித்து தன் காதலன் மற்றொரு மாதிடம் மையல் கொண்டான் என்று எண்ணினள். கோவலன் முடித்ததும் மாதவி அம்மகர யாழை மணிக்கையில் வாங்கிக் குழலினு மினிய குரலால் தான் கோவலனையன்றி மற்றொருவன் மேல் காதல் கொண்டவள் போலக் குறிப்பமைத்துக் கான வரி பாடினள். அக்குறிப்பை அறிந்த கோவலன் கடுங்கோபங்கொண்டு, மாதவியைப் பார்த்துப் "பொது மாதாகிய உனது பொய் யொழுக்கத்தை மெய்யென்று நம்பி மோசம் போனேன். உன் போலிக்காதலை மெய்க்காதல் என்று மயங்கி, என் முன்னோர் தேடி வைத்த பெரும் பொருளை யெல்லாம் தொலைத்தேன். மாயப் பொய் பலகூட்டும் மாயத்தவளாகிய உனது சேர்க்கை எனக்கு வேண்டாம்" என்று வெகுண்டெழுந்து தனியாகத் தன் மனைநோக் கிப் புறப்பட்டான். மாதவியும் மனம் வருந்திக் கடற்கரையினின்றும் தனியே போந்து தன் மனை சேர்ந்தாள்.

இஃதிவ்வாறிருப்பக் கணவனைக் காணாது கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த கண்ணகி ஒரு நாள் சிறிது கண்ணயர்ந்திருக்கையில் ஓர் கனவு கண்டாள். தன் கணவன் மீண்டும் தன் மனைக்கு வருவது போலவும் இருவரும் ஒரு அயலூருக்குப் போவது போலவும் அங்கு அவ்வூரார் அவன்மீது அடாதபழி சுமத்தித் தீங்கிழைத்தது போலவும் தான் அவ்வூர்க் காவலன் முன்னே சென்று வழக்குரைத்தது போலவும் அப்பால் அந்நாட்டுக்கும் அரசனுக்கும் கேடு விளைந்தது போலவும் கண்ணகி கனவு கண்டு அதனால் என்ன தீங்கு விளையுமோ என்று ஏங்கினவளாய்த் தன் தோழியிடம் அதைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்பொழுது கோவலனும் அவள் கண் எதிரே தோன்றினான். கண்ணகி தான் கண்ட காட்சி கனவோ நனவோ என்று கலங்கி நிற்கையில் கோவலன் அவளது வாடிய மேனி கண்டு மனம் வருந்தி, 'என் காதலி! பொய்யை மெய்போல நடிக்கும் பொது மாதின் மயக்கத்தில் ஈடுபட்டு நம் குலத்தோர் தேடி வைத்த பொருட்குன்றைத் தொலைத்தேன். இப்பொழுது வருமையால் நாணுகின்றேன்' என்றான். அதைக்கேட்ட கற்பரசியாகிய கண்ணகி தன் கணவன் மாதவிக்குக் கொடுக்கக் கையில் பொருளில்லாமையால் வருந்தினான் என்று

எண்ணிக் கணவனுடைய மனவாட்டம் திருத்துவதே கற்புடைய மாதின் கடமை என்னும் உயரிய நீதியைக் குறிக்கோளாகக்கொண்டு, அகமுக மலர்ந்து, "ஐயனே! இன்னும் என்னிடம் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன. அவற்றை உம்மிடம் தருகின்றேன்" என்றாள். இதைக் கேட்ட கோவலன் தனது காதலியின் உயரிய மனப்பான்மையைக் கண்டு மனம் நொந்து, என் கண்ணே! நீ தருவதாய்ச் சொல்லிய மணிச் சிலம்புகளை மதுரைமா நகரில் கொண்டு விற்று அப்பொருளை மூலதனமாக வைத்து வாணிகம் செய்து நான் சிதைத்த பொருளை மீண்டும் சேர்க்க விரும்புகிறேன். அதன் பொருட்டு நான் மதுரைக்குச் செல்ல வேண்டும். நீயும் என்னோடு புறப்படு" என்றான். அப்பொழுது கண்ணகி மதுரைமா நகர் எத்திசையிலுள்ள தென்றாவது எவ்வளவு தூரத்திலுள்ள தென்றாவது ஒன்றும் வினவாமல் 'கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை' என்னும் சீரிய இலக்கணத்திற்குச் சிறந்த சான்றாகக் கணவனுடன் போவதற்கு எழுந்தாள். இருவரும் பொழுது புலரு முன்னமே தமது பெருமை சேர் வீட்டை விட்டுப் பெயர்ந்து மதுரைமா நகரை நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் செங்கதிரோன் வெங்கதிர்களை வீசினான். அவ்வெம்மைக்கு

ஆற்றாது கண்ணகி மெய் தளர்ந்தாள். மண்மேல் நடந்தறியாத அவளது மெல்லிய பாதங்கள் நோவுற்றன. அவ்வாறு கண்ணகி வருந்தியதைக் கண்ட கோவலன் அவ்வழியிலிருந்த ஒரு சோலையிற் சென்று இளைப்பாறும் பொருட்டுத் தன் காதலியை அழைத்துச் சென்றான். அங்கு அழகிய தோகையை விரித்தாடிய சோலை மயிலைக் கண்டும், குழலினும் யாழினும் இனிமையாய்ப் பாடிய குயிலொலியைக் கேட்டும், நறுமணம் கமழ்ந்த மெல்லிய பூங் காற்றை நுகர்ந்தும் கண்ணகி சிறிது துயர் தீர்ந் தாள். அப்பொழுது அம்மாது தன் காதலன் முகத்தைக் கனிவுடன் நோக்கிக் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் நகை யிலங்க, ஐயனே! மதுரை மூதூர்க்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கின்றது?' என்று வினவினாள். அம் மொழிகள் அழற் புண்ணில் அம்பு பாய்ந்தாற் போலக் கோவலன் உள்ளத்திற் பாய்தலும், அவன் மனம் வெதும்பி, "மாதே! நாம் ஒரு காதவழி வந்துவிட்டோம். இன்னும் முப்பது காத மிருக்கின்றது" என்று மொழிந்தான்.

அச்சோலையின் ஒரு பக்கத்தில் சமண சம யப் பெரியார் ஒருவர் தவஞ் செய்துகொண் டிருந்தார். அம் முனிவரைக் கண்ட இருவரும் பணிந்து நின்றார்கள். கவுந்தியடிகளும் கண்

விழித்துப் பார்த்து, "மெல்லிய மேனியை யுடைய நீங்களிருவரும் வறுமையாளர்போல இவ்வழியே வருவதற்குக் காரணம் என்னை?" என்று வினவினர். அதைக்கேட்ட கோவலன். அருந்தவ முனிவரே! நாங்களிருவரும் உயிர் வாழும் பொருட்டு மதுரைமா நகருக்குச் செல்கின்றேம் என்றான். அப்பொழுது அடிகள் அவர்கள்மீது இரக்கங்கொண்டு அந்தோ! அந் நகரத்திற்குக் காட்டு வழியாகவும் நாட்டு வழியாகவும் இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டுமே. அக் கடுவழியை இக்காரிகை எவ்வாறு கடக்கப் போகின்றாள் என்று ஏங்கித் தானும் மதுரைக்கு உடன் செல்ல இசைந்தார். கவுந்தியடிகள் தமக்கு வழித்துணையாக வருவதற்கு இசைந்த போது காதலர் இருவரும் கண்ணிலார் கண் பெற்றார்போல் களிகூர்ந்தார்கள். அடிகளும் சோலையினின்று எழுந்து மதுரைக்குச் செல்லும் வழிகளையும் அவற்றிலுள்ள துயரங்களையும் கோவலனிடம் எடுத்துரைத்து அவ்வழிகளில் தமக்கேற்ற ஒருவழியாக இருவரையும் அழைத்துச் சென்றார். நெடுந்தூரம் கடுங்கானகத்தில் நடந்துசென்று காவிரியாற்றின் தென்கரையின் ஓர் அழகிய பொழிலின்கண் மூவரும் தங்கி இளைப்பாறினார்கள். அப்பொழுது ஒரு கழிந்த காமுகனும் அவன் காதலியும் களித்து நகையாடி

அவ்வழியே வந்தார்கள். கடுந்தவத்தால் உடல் மெலிந்த முனிவரோடு காமனும் இரதியும் போல் இனிதமர்ந்திருந்த இருவரையும் அவர்கள் இன்னாரென்று அறிய ஆர்வங்கொண்டு, "முனிவரைப் பார்த்து அருந்தவரே! உம்மொடு போந்த இவர்கள் இருவரும் யார்?" என்று வினவினார்கள். அதற்கு அப்பெரியார் "இவர்கள் எனது மக்கள், வழிநடந்த துன்பத்தால் வருந்தி யிருக்கின்றார்கள். அவரிடம் ஒன்றும் உரையாடாது அப்பாற் செல்லுங்கள்" என்றார். அதைக் கேட்ட காமுகர் இருவரும் குலுங்க நகைத்து, அறிவாற் சிறந்த அருந்தவத்தோரே, ஒரு வயிற்றிற் பிறந்த ஆணும் பெண்ணும் காதலனும் காதலியுமாக வாழலாமென்று நீர் கற்ற எந்நூலேனும் கூறுகிறதோவென்று கேட்டார்கள். அத்தீமொழி செவியிற் பட்டதும் கண்ணகி தன் செவிகளைப் பொத்திக்கொண்டு கோவலன் முன்னே கலங்கி நின்றாள். கற்புடைய மங்கையாய கண்ணகியை அக்காமுகர்கள் ஏளனஞ் செய்தார்களென்றெண்ணிய தவச்செல்வராகிய கவுந்தியடிகள் வெகுண்டு அவ்விருவரையும் பார்த்து. "நீர் இம்முள்ளுடைக் காட்டில் முது நரி யாருக" என்று சபித்தார். அது தவத்தின் மிக்கவர் சாபமானதால் உடனே பலித்து இருவரும் நரியாகி

அந்நெடுங் கானகத்தில் ஊளையிடத் தொடங்கினார்கள். இதைக்கண்ட நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி, "ஐயனே! அறியாமையால் சிறு சொல் வழங்கிய அவரது சிறுமையை உமது பெருமையால் பொறுத்துச் சாபவிடை செய்தருள வேண்டும்" என்று, விண்ணப்பஞ் செய்தார்கள். அதற்கு முனிவரும் இரங்கி, "வணங்கிய வாயினரல்லாத இவரிருவரும் நரியாக ஓராண்டு துன்பம் உழந்தபின் முன்னை உருவம் பெருவார்கள்" என்று அருளினார்.

மூவரும் பின்னும் வழி நடந்து காட்டு வழியாகச் செல்லும்பொழுது வெய்யோன் வெப்பத்தால் கண்ணகியின் மெல்லிய மேனி வாடி நிறங் குன்றியது. கல்லிலும் முள்ளிலும் கடுவெயிலிலும் நடந்த அவளது மெல்லிய பாதங்கள் கொப்புளங்கொண்டு பூமியில் பொருந்தாமல் நோயுற்று வருந்தின. இவ்வாறு பொறுக்க முடியாத துயருழந்தும் கண்ணகி தனது துயரைச் சிறிதும் காணாதவளாய்த் தன் காதலன் மேனி வாடி வருந்தியதென்று மனம் நொந்தாள். கடுங் கதிரோன் வெம்மைக் காற்றாத தன் காதலியின் துயர் கண்டு கோவலன் அடிகளிடம் முறையிட்டான். அடிகளும் பெரிதும் மனம் வருந்திப் பகற்பொழுதில் வழி நடப்பதை விட்டு இராப்பொழுதில் நடக்க இசைந்தார்.

இவ்வாறு நில மகளும் நித்திரை செய்யும் இராப்பொழுதில் மூவரும் நிலாவின் ஒளியையே துணையாகக்கொண்டு வழி நடந்தார்கள். மெல்ல மெல்ல நடந்து மதுரைமாநகர் சேர்ந்து வையை என்னும் பொய்யா நதியைக் கடந்து அங்கிருந்த ஆயர் சேரியில் மூவரும் தங்கினார்கள். அப்போது மாதரி என்னும் ஒரு இடைக்குல மாது தன் தெய்வத்தை வழிபட்டு அவ்வழியே வந்தாள். அம்முது மகளின் தோற்றத்தால் அவளது செவ்விய மனப்பான்மையை யறிந்த கவுந்தியடிகள் கண்ணகியை அவளிடம் அடைக்கலமாகக் கொடுக்க எண்ணினார். அம்மாதரியிடம் கண்ணகியின் மெல்லிய தன்மையையும் கற்பின் பெருமையையும் எடுத்துரைத்து அவளிடம் கண்ணகியை ஒப்புவித்தார். அம் முது மகளும் முகமலர்ந்து கண்ணகியை அழைத்துக் கொண்டு தன் மனை யடைந்தாள். கோவலனும் தன் காதலியோடு ஆயர் சேரியில் தங்கியிருந்தான். கவுந்தியடிகள் இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு மதுரைமா நகரில் சமண முனிவர் இருந்த இடம் சேர்ந்தார். கண்ணகி தனது மலர்க்கையால் அமுதாக்கி மாதரிமனையில் தன் காதலனை உண்பித்தாள். கோவலனும் சிறிது நேரம் இளைப்பாறி தன் காதலியைத் தனிமையாய் வைத்துவிட்டுச் சிலம்பைக்

கொண்டு விற்பதற்காக அம்மனையினின்றும் புறப்பட்டான்.

இஃதிவ்வாறிருக்க மதுரைமா நகரில் செங்கோல் செலுத்திய நெடுஞ் செழியனது அரண்மனையில் அரசமாதேவி அணிந்திருந்த காற் சிலம்புகளில் ஒன்று காணுமற் போயிற்று. அரண்மனைப் பொற்கொல்லனே அச்சிலம்பைக் கவர்ந்து கொண்டான் என்பதை அறியாத அரசனும் மற்றையோர்களும் சிலம்பைக் களவாடிய கள்வனை கண்டுபிடிக்கப் பல வழிகளால் முயன்ருர்கள்.

கோவலன் தன் காதலியின் சிலம்பைக் கையிலேந்தி வீதியின் வழியே செல்லும் பொழுது அரண்மனைப் பொற்கொல்லன் எதிரே வரக்கண்டான். அவனது நடையாலும் உடையாலும் அவனை உயர்ந்த பொற்கொல்லனென்று கருதிக் கோவலன் தன் சிலம்பை விலை மதித்தற்காக அவன் கையில் கொடுத்து இச் சிலம்பை விலை கொடுத்து ஏற்றுக்கொள்வார் எவரேனும் இந்நகரிலுண்டோவென்று வினவினுன். சிலம்பைக்கண்ட பொற்கொல்லன் அளவிலா மகிழ்ச்சியடைந்து அதனை நன்ருய் உற்றுப் பார்த்து, “ஐயனே! இவ்வுயரிய சிலம்பு அரண்மனையில் அரசமாதேவிக்கே ஏற்றதாகும். இதனை நான் அரசனிடம் அறிவித்து அரண்மனை ஆட்களை

அழைத்து வருமளவும் இச்சிலம்பை வைத்துக் கொண்டு இங்கேயே இரும்'' என்று சொல்லி அருகிலிருந்த ஒரு சிறு மனையில் கோவலனை அமைத்து அரண்மனையை நோக்கி விரைந்து சென்றான். அரண்மனையில் தன் காதலி யைக் காண அந்தப்புரத்தை நோக்கி அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்த அரசனைக் கண்டான். உடனே அவனது அடிகளில் விழுந்து, "அரசே! அரண்மனையிற் களவுபோன அரசமாதேவியின் காற்சிலம்பைக் கவர்ந்துகொண்ட கள்வன் இப்பொழுது என் சிறு மனையில் அகப்பட்டான்'' என்று வெகு ஆர்வத்தோடு கூறினான். அதைக்கேட்ட அரசன் காம மயக்கத்தாலும் வினைவிளை கால மாதலாலும் அரண்மனைக் காவலாளரைக் கூவி யழைத்து, 'அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்து கொண்டு கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக' என்று ஆணை செய்து அந்தப் புரம் சென்றான்.

தான் எண்ணிய தீய எண்ணம் எண்ணிய வாறே முற்றுப்பெற்றது என்று இறுமாந்த பொற்கொல்லன் காவலாளரை அழைத்துக் கொண்டு கோவலன் இருந்த இடம் சேர்ந்தான். அங்கு யாதொரு தீங்கும் அறியாது கையில் சிலம்பை வைத்துக்கொண்டிருந்த கோவலனைச்

சுட்டிக் காட்டி இவன்தான் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்த கள்வன்; இவனைக் கொல்லுங்கள் என்றான். உடனே அக்காவலாளரில் கல்லாக் களிமகன் ஒருவன் தனது உடைவாளை உருவிக் கோவலன் விலாவில் பொறுக்கென்று குத்தினான். வெட்டுண்ட கோவலன் மடிந்து விழுந்து மாண்டான். அவன் கையில் அமைந்திருந்த சிலம்பை எடுத்துக்கொண்டு காவலாளர் அரண்மனை சேர்ந்தார்கள்.

கோவலன் வெட்டுண்டு இறந்த செய்தி விரைவாக மதுரைமா நகரில் பரவியது. வைகையாற்றில் நீராடச் சென்ற மாதரி என்னும் முதுமகள் அச்செய்தியைச் செவியுற்றாள். கொலையுண்டு இறந்த கொடுவினையாளன் கண்ணகியின் கணவனே என்று எண்ணி நடுங்கினாள். உடனே ஓடிவந்து கண்ணகியைக் கண்டாள். ஒன்றும் பேச நாவெழாமல் நின்றாள். அவள் மனக் கலக்கத்தைக் கண்ட கண்ணகி என்ன நேர்ந்ததென்று ஏங்கிக் கேட்டாள். மாதரியும் மனம் பொருது தான் நீர்த்துறையிற் கேட்ட செய்தியை எடுத்துரைத்தாள். தன் காதலன் வெட்டுண்டு இறந்தானென்று கேட்ட கண்ணகி பொங்கி எழுந்தாள். விழுந்தாள். விம்மினாள். அழுதாள். அரற்றினாள். ஐயோ, தெய்வமே! இனி என் காதலனை என்று காண்பேன்? என்று

ஏங்கினாள். கலங்கினாள். மயங்கினாள். ஆயர் சேரியினின்றும் புறப்பட்டுத் தன் காதலனைக் காண எழுந்தாள். விண்ணிலே விளங்கித் தோன்றிய கதிரவனைக் கண்டாள். கண்டு கடுந் துயர் பொங்கிக் கதிரவனைப் பார்த்து, "ஏ காய் கதிர்ச் செல்வனே! நீ அறியாத செயல் இவ்வுலகில் ஒன்றுமில்லையே! நீயறிய என் கணவன் கள்வனோ?" என்று முறையிட்டாள். அப்பொழுது, "மாதே! உன் கணவன் கள்வனல்லன். அவனைக் கள்வன் என்று கொன்ற இவ்வூரை எரியுண்ணும்" என்று ஆகாயவாணி எழுந்தது. அது கேட்ட கண்ணகி திடங்கொண்டு தன் காதலன் இறந்து கிடந்த இடத்திற்குச் சென்றாள். குருதியில் தோய்ந்து கிடந்த கோவலனைக் கண்டாள். தன் காதலனது பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடந்ததைக் கண்டு புலம்பினாள். அவனது தாரணி மணி மார்பு தரையில் கிடந்ததைக் கண்டு தயங்கினாள். தன் கடுவினையை நினைந்து நினைந்து கசிந்துருகினாள். இக் கொடுங்கோல் மன்னன் ஆளும்நாட்டில் மாதரும் உண்டோ! மாதரும் உண்டோ!! என்று மயங்கினாள். சான்றோரும் உண்டோ! சான்றோரும் உண்டோ!! என்று சீறினாள். தெய்வமும் உண்டோ! தெய்வமும் உண்டோ!! என்று திகைத்து ஏங்கினாள். இவ்வாறு அழுது மயங்கித்

தன் கணவனது பொன்னூர் மேனியைப் பொருந்தித் தழுவிக்கொண்டாள். அப்பொழுது கோவலன் அவளது கண்ணெதிரே எழுந்தான். தன் காதலியின் திருமுகத்தைப் பார்த்து நிறைமதி போன்ற உன் முகம் கன்றியதே என்று தன் கையால் அவள் கண்ணீரை மாற்றினன். அப்பொழுது கண்ணகி அழுது ஏங்கி நிலத்தில் விழுந்து தன் கணவனது இணையடியைத் தன் கரங்களால் பற்றினள். கோவலன் பொல்லாப் புலாலுடலை விட்டுப் பழுதிலாத் தெய்வ வடிவோடு தோன்றித் தேவர்கள் புடைசூழ விண்ணிலே மறைந்தான். அதைக்கண்ட கண்ணகி, ஐயோ, இதென்ன மாயமோ? என்னை மயக்கியதோர் தெய்வமோ! என் காதலனை எங்குப்போய் இனிக் காண்பேன்? என்று மீண்டும் அழுது புலம்பி உண்ணின் றெழுந்த ஊக்கத்தால் உறுதிபெற்றுக் குற்றமற்ற தன் கணவனைக் கொலைசெய்த அரசனைக் காணப் புறப்பட்டு அரண்மனை வாயிலை யடைந்தாள். அரசனது ஏவலாளர்கள் கண்ணகியின் வருகையை அரசனுக்கு அறிவித்தார்கள். அவனும் அம்மாதை உள்ளே வரும்படி ஆணை செய்தான். கற்பெனும் திண்மையும் காவலன் கண்ணெதிரே தோன்றிற்று. மெய் முழுதும் பழகி படிந்திருந்தது. கருங்கூந்தல் விரிந்து

கிடந்தது. கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. கையில் தனிச் சிலம்பு விளங்கிற்று. இக்கோலத்தைக் கண்ட வேந்தன் மனமுருகி வந்து நிற்கும் மாதே! நீ யாரென்றான். அதற்குக் கண்ணகி, "மன்னா! தன் மகன் பசுவின் கன்றைத் தேர்க்காலிற் கொன்ற குற்றத்திற்காக அவ்வருமந்த மைந்தன்மேல் ஆழியைச் செலுத்திய மன்னவன் மரபினோர் ஆளும் புகார் நகரமே என் ஊராகும். அவ்வூரில் இசை விளங்கு பெருங்குலத்து மாசாத்துவானுக்கு மகனாய்ப் பிறந்து ஊழ்வினைப் பயனால் உன் நகர் புகுந்து கொலைக்களப்பட்ட கோவலன் மனைவியே யான்" என்றாள். அதைக்கேட்ட அரசன், "மாதே! உன் கணவன் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்த குற்றத்திற்காகக் கொலை யுண்டான். கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலன்று, அறநூல் விதித்த முறையே யாகும்" என்றான். அம்மொழிகளைக் கேட்ட கண்ணகி கடுந்துயரடைந்து, "மதிமயங்கிய மன்னவனே! என் கணவன் கள்வனே யல்லன். அதனை நிறுவும் பொருட்டே இங்கு வந்தேன். அவன் கையில் இருந்த சிலம்பு என் சிலம்பே யாகும். அதற்கோர் அடையாளம் கூறுவேன் கேள். அதன் உள்ளே இருக்கும் பரல் மாணிக்கம்" என்றாள். உடனே அரசன் தன் சிலம்பினுள்ளே இருக்

கும் பரல் முத்து என்று சொல்லிக் கோவலனிட மிருந்து தன் காவலாளர் மூலமாகப் பெற்ற சிலம்பை எடுத்துக் கண்ணகி முன்னே வைத்தான். அம்மாது அச் சிலம்பை எடுத்து உடைத்தாள். அதன் உள்ளேயிருந்த மாணிக்கம் வீறிட்டெழுந்து மணியாசனத்திலிருந்த மன்னவன் வாயில் தெறித்தது. மாணிக்கத்தை மன்னவன் கண்டான். தன் நீதி பிழைத்தது என்று அறிந்தான். அப்போதே அவன் வெண் குடை தாழ்ந்தது. கையிலிருந்த செங்கோல் தளர்ந்தது. அந்தோ! பொற்கொல்லன் சொற் கேட்டு இத் தவறிழைத்த யானோ அரசன்? யானே கோவலன் உயிரைக் கவர்ந்துகொண்ட கள்வனானேன். இதுகாறும் தவறாத அரச நீதி என்னால் தவறியது. இனி நான் உயிர் வாழ மாட்டேன் என்று மன்னவன் மயங்கி விழுந்து மாய்ந்தான். இதைக் கண்ட கண்ணகி பின்னும் சீற்றந்தணியாதவளாய், "யான் பத்தினிப் பெண்டிர் திகழ்ந்த பதியிற் பிறந்தேன். யானும் ஒரு பத்தினியேயானால் இவ்வரசனோடு மதுரையையும் ஒழிப்பேன்" என்று சீறித்தனது இடது மார்பைத் திருகி மும்முறை வலம் வந்து மதுரையின்மீது எறிந்தாள். அப்பொழுதே அந் நகரில் அழல் மண்டிற்று. அக்கினித் தெய்வம் அழகிய கோலங்கொண்டு அவள் முன்னே

தோன்றிக் கற்பரசீ! உனது ஆணையின்படியே இப்பொழுது இந்த நகரத்தை எரிக்கப் போகின்றேன். இங்கு யாரைக் காக்கவேண்டும் யாரை அழிக்கவேண்டும் என்று பணிந்து வின விற்று. அப்பொழுது தெய்வ ஒளியோடு விளங் கிய கண்ணகி அத்தெய்வத்தைப் பார்த்துப் பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண் டிர், மூத்தோர், பாலர் என்னும் இவரைக் காத்துத் தீத்திறத்தார் பக்கமே சேர்க என்று ஆணை செய்தாள். அவ்வாறே மதுரைமா நகரில் தீப்பற்றித் தீயோரை அழித்தது. மதுரையை எரித்த மாபெரும் ப்த்தினியின் முன்னே மதுரைமா தெய்வம்வந்து தோன்றிக் கோவலன் கொலையுண்டிறந்தது முன்வினைப் பயனேயாகும் என்று முற்பிறப்பில் நடந்த வரலாற்றை எடுத் துரைத்து அவள் சீற்றம் தணித்தது. அப்பால் கண்ணகி மதுரையினின்றும் புறப்பட்டு "என் கருத்தில் உறையும் கணவனைக் காணுமளவும் இருக்கவு மாட்டேன், நிற்கவு மாட்டேன்" என்று இரவும் பகலும் நடந்து சென்று நெடு வேள் குன்றம் அடிவைத்தேறி ஓர் வேங்கை மரத்தின் நிழலில் வந்து நின்றாள். அத் தெய்வ மாதைக் கண்ட குன்றக்குறவர் அவளருகே சென்று, 'அம்மையே! மனம் நடுங்கி இம் மர நிழலில் வந்து நிற்கும் நீர் யாரோ?' என்று

வணங்கி வினவினார்கள். அதற்குக் கண்ணகி சிறிதும் சீற்றம் கொள்ளாமல் மதுரைமா நகரில் பழவினைப் பயனால் கணவனை யிழந்த கடுவினையேன் யான் என்றாள். அதைக்கேட்ட குன்றக்குறவர் அஞ்சி இறைஞ்சி நின்றார்கள். அப்பொழுது வானவர் மலர் மாரி பொழிந்தார்கள். வானத்தினின்று ஒரு விமானம் இறங்கிற்று. அவ்விமானத்தில் கோவலன் தெய்வ வடிவோடு விளங்கினான். அவ்விமானத்தோடு வந்த விண்ணவர் கண்ணகியைத் தொழுது அக் கற்புடைய தெய்வத்தை விமானத்தில் ஏற்றிக் கொண்டு ஆகாயத்தில் மறைந்தார்கள்.

இக்காட்சியைக் கண்ட குன்றக்குறவர்கள் தம் நாட்டரசனான சேரன் செங்குட்டுவனிடம் சென்று தாம் கண்ட புதுமையை எடுத்துரைத்தார்கள். அவ்வரசன் கண்ணகியின் கற்பின் திறத்தை அறிந்து தன்னாட்டிலும் விண்ணுலகடைந்த பத்தினியைத் தெய்வமாக வழிபடக் கருதி இமயமலையில் சிலை எடுத்து கங்கையாற்றில் நீராட்டி வஞ்சிமாநகரில் ஆலயம் அமைத்துக் கண்ணகி தெய்வத்தை அங்கு கவின் பெற நிறுவி வேள்வியும் விழாவும் வகுத்து அக்கோவிலை மும்முறை வலம் வந்து தொழுது நின்றான். அப்பொழுது பத்தினித் தெய்வம் மின்னற் கொடிபோல் விண்ணிலே விளங்கித் தோன்றிச்

செங்குட்டுவனுக்குக் காட்சி யளித்தது. அதைக் கண்டு அரசன் ஆனந்த பரவச மடைந்தான். சேரநாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளமும் சுரப்பதாக என்று கண்ணகித் தெய்வம் வரங்கொடுத்தது. அவ்வாறே சேர நாடு செழிப்புற்றது. இதை யறிந்த கடல் சூழ் இலங்கையை யாண்ட கயவாகு வேந்தன் தன் நாட்டிலும் பத்தினிக் கோவிலமைத்துக் கண்ண கியை வழிபட்டான். பாண்டிய நாடு பொற் கொல்லன் செய்த பாதகத்தால் பஞ்சமுற்று வருந்தியதைக் கண்ட பாண்டியன் பத்தினித் தெய்வத்தின் சீற்றம் தணிப்பதற்காகக் கண்ண கிக் கோயிலமைத்து அங்கு ஆயிரம் பொற் கொல்லரைப் பலிகொடுத்தான். அதற்கப்பால் அந்நாட்டிலும் பஞ்சம் நீங்கி மழை வளம் சுரந்தது. இவ்வாறு கண்ணகி தமிழ் நாட்டுத் தெய்வமாக இன்றும் விளங்குகின்றாள்.

---

## 7. புனிதவதியார்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை"

— திருவள்ளுவர்.

சோழநாட்டில், வாணிகத்தால் வளம் பெற் றோங்கிய காரைக்கால் என்னும் திருப்பதியில் தனதத்தன் என்னும் பெயர் வாய்ந்த ஓர் வணி

கன் சிவநேசச் செல்வனாய் வாழ்ந்து வந்தான். அவன் முன் செய்த தவத்தின் பெருமையால் ஒப்பற்ற அழகு வாய்ந்த ஓர் பெண்மணியைப் பெற்று அப்பிள்ளைக்குப் புனிதவதி என்னும் பெயரிட்டான். அம்மங்கை திருமகள் போன்ற அழகினை யுடையவளாய்த் திகழ்ந்து மணப் பருவ முற்றபோது நாகைப் பதியில் இருநிதிச் செல்வனாய் விளங்கிய பரமதத்தனுக்கு அம் மாதை மணம் பேசினார்கள். புனிதவதியாரின் பெற்றோரும் அத்திருமணத்திற்கு இசையவே அவ்விரு வணிகரது பெருஞ் செல்வத்திற்கேற்ற செவ்விய முறையில் காரைக்காலில் மணமக்கள் இருவருக்கும் கடிமணம் நிகழ்ந்தது. தன் மகளையும் மருகனையும் கண்களினும் அருமை யாய்க் காதலித்த தனதத்தன் அவர்களை நாகைக்கு அனுப்ப மனமற்றவனாய் காரைக் காலிலேயே ஓர் அழகிய மணி மாடம் அமைத்து அங்கு வாழ்ந்துவரச் செய்தான். காதலர் இருவரும் கருத்து ஒருமித்து அற வோர்க் களித்தும் அந்தண ரோம்பியும் துறவோ ரைப் போற்றியும் இல்லறத்தை இனிது நடத்தி னார்கள். அரன் அடியார் தம் மனையை அடைந் தக்கால் அகமும் முகமும் மலர்ந்து அவர்க்குத் திருவமுதும் செம்பொன்னும் செழுந்துகிலும் முதலாய எல்லாப் பொருள்களும் இனிதளித்து

அன்பர்கள் இருவரும் அறநெறியில் தலை நின்றார்கள்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒருநாள் பரமதத்தனைக் காணவந்த அன்பர் சிலர், இரு மாங்கனிகளை அவனுக்கு அன்புடன் அளித்தார்கள். அவனும் அக்கனிகளை அவரது கனிந்த மனப்பான்மைக்கு அடையாளமாக ஏற்று அவர்கள் விரும்பிய பொருளை அன்புடன் கொடுத்து அனுப்பிவிட்டு மாங்கனிகள் இரண்டையும் தன் மனைவியாரிடம் சேர்ப்பித்தான். புனிதவதியாரும் அக்கனிகளை ஆர்வத்தோடு ஏற்றுத் தம் காதலன் அறுசுவை யுணவு அருந்த வரும்பொழுது அவற்றைப்படைத்து அவன் மனதை மகிழ்விக்கக் கருதி யிருந்தார். சிறிது நேரம் சென்றபின் தூயவெண்ணீறு துதைந்த மேனியோடு சிவனடியார் ஒருவர் புனிதவதியார் திருமனை புகுந்து கடும்பசியால் மிக வருந்தி நின்றார். அப் பெரியாரது முதிய பருவத்தையும் தளர்ந்த திருமேனியையும் வாடிய முகத்தினையும் கண்ட புனிதவதியார், அவர் பசி நோயால் வருந்துகின்றார் என்றறிந்து அவரை முகமலர்ந்து வரவேற்றாள். அப்பொழுது அப்பெரியார் அமுது செய்வதற்கு வேண்டும் கறி யமுதுகள் ஆக்கப் பெறாமல் அன்னம் மட்டுமே ஆக்கப் பெற்றிருந்தது. கறி யமுதம் ஆகும் வரை அடி

யாரது கடும்பசி பொறுது என்றறிந்து புனித வதியார் ஒல்லும் வகையால் உணவளித்து அவரது பசியைத் தீர்க்க எண்ணினாள். அவ்வாறே விதி முறைப்படி அப்பெரியார்க்கு அமுதம் படைத்து அதனோடு சேர்த்து உண்பதற்கு வேறொரு கறியுமில்லாமையால் கணவன் தந்த கனிகளில் ஒன்றை உடனே எடுத்து அமுதுடன் படைத்தார். அடியாரும் மாங்கனியை அன்னத்தோடினி தருந்திப் புனிதவதியாரது பெருமையைப் போற்றிப் புகழ்ந்து போயினார்.

இவ்வாறு பெரியார் அகன்ற பின்னர் பரமதத்தன் வழக்கம்போல உணவருந்தத் தன் மனைக்கு வந்தான். அப்போது அமுதும் கறி வகைகளும் முறையாக ஆக்கப்பட்டிருந்தமையால் அவற்றையும் மாங்கனியையும் புனிதவதியார் அன்புடன் படைத்தார். பரமதத்தன் அம்மதுரமாங்கனியின் நறுஞ்சுவை நுகர்ந்து ஒரு கனியோடு அமைவுறாமல் தான் அனுப்பிய மற்றைய கனியையும படைக்குமாறு தன் மனைவியார்க்கு ஆணை செய்தான. அதுகேட்ட புனிதவதியார் இன்ன செய்வதென்றறியாது தங்கணவன் ஆணையைத் தாங்கி மாங்கனி கொண்டு வரச் செல்பவர் போல அவ்விடத்தினின்றும் அகன்றார். முன்னர் தாம் மாங்கனியை வைத்திருந்த இடத்திற்குச் சென்று அன்பர்கள் எண்

ணிய பொருள்களை எண்ணியாங் களிக்கும் இறைவனை அம்மையார் நினைந்து நெஞ்சம் குழைந்து நின்றார். அப்பொழுது அதிமது ரக் கனியொன்று முன்னே இலங்கக் கண்டார். அக்கனியை ஆர்வத்தோடு எடுத்து விரைந்து சென்று தம் கணவன் அமுதுண்ட கலத்தில் படைத்தார். அக்கனியின் சுவையைப் பரமதத் தன் நுகர்ந்தான். முந்திய கனியினும் முதிர்ந்த சுவை விளங்கக் கண்டான். அமுதினுமினிய அக்கனியின் சுவை மூவுலகினும் பெறற்கரி தென்று பெரிதும் மகிழ்ந்து அக்கனி எங்கு கிடைத்ததென்று தன் தலைவியை வினவினான். புனிதவதியார் நிகழ்ந்த புதுமையைத் தம் தலைவனிடம் உரைக்க மனமற்றவராய்ப் பொய் மையும் சொல்ல மாட்டாதவராய்ச் சிறிது நேரம் திகைத்து நின்றார். பின்பு நிகழ்ந்ததை நிகழ்ந்த வாறு சொல்லுவதே தம் கடமையென் றுணர்ந்து எல்லாம் வல்ல இறைவனைக் கருத் தில் அமைத்துப் புனிதவதியார் அக்கனியின் வரலாற்றைக் கணவனிடம் எடுத்துரைத்தார். தத்தனும் அதைக் கேட்டுத் ததத்தளித்துப் புனித வதியாரை நோக்கி இறைவன் திருவருளால் "இக்கனியை நீ பெற்றாயாயின் அவனருளால் இன்னும் ஓர் கனி அழைத்துத் தருவாய்" என மொழிந்தான். அதுகேட்ட அம்மையார் மனங்

கலங்கி இறைவனை மனத்தில் எண்ணி, ''ஐயனே, மற்றுமொரு மாங்கனி வராதிருந்தால் என் உரை பொய்யுரையாகுமே'' என்று வருந்தி நின்றார். அப்பொழுது இறைவன் அருளால் அம்மையார் திருக்கரத்தில் ஓர் அருங்கனி வந்தெய்தியது. அக்கனியைத் தன் தலைவனிடம் கொடுத்தார். அவனும் அதிசயித்து வாங்கினான். வாங்கிய கனி உடனே அவன் கரத்தினின்றும் மறைந்து போயிற்று. இப்புதுமையைக் கண்ட பரமதத் தன் உளம் தடுமாறித் தன் தலைவியைத் தெய்வ மகளாகக் கருதி அவளை விட்டு நீங்கத் துணிந் தான். பின்னும் சிலகாலம் தாமரையிலையில் தங் கிய தண்ணீர்த் துளிபோல் புனிதவதியாருடன் மனையறம் புரிந்து வாழ்ந்து அப்பால் திரைகட லோடித் திரவியம் தேட விருப்ப முடையவன் போல மரக்கலம் செய்து முடித்து அயல் நாட்டு மக்கள் விரும்பும் பொருள்களை அதில் ஏற்றி ஒரு நன்னாளில் தன் பதியினின்றும் புறப்பட் டான். மரக்கலம் செல்லும் வழியில் பரமதத்தன் பல நாடுகளிலும் தங்கி ஆங்காங்குள்ள பொருள் களையும் மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு பாண் டிய நாட்டில் ஒரு பட்டினத்தில் வந்து சேர்ந் தான். அப்பதியில் தான் கொண்டுவந்த பொருள் களில் வாணிகஞ் செய்து செல்வம் சேர்த்து அவ்வூரிலேயே வணிக மரபி. லுதித்த வனப்பு

டைய ஓர் கன்னியை வதுவை செய்தான். அப் பட்டினத்தையே தன் பதியாகக்கொண்டு தலைவி யோடு இல்லறம் நடாத்திச் சில ஆண்டுகளில் செஞ்சுடர் போன்ற ஓர் பெண் மகவைப்பெற்று, அப்பிள்ளைக்குத் தான் குலதெய்வமாய்க் கொண்ட புனிதவதியாரின் பெயரையே அமைத் தான். இவ்வாறு பரமதத்தன் பாண்டிய நாட் டில் இன்புற்று வாழும் செய்தியைப் புனிதவதி யாரின் சுற்றத்தார் கேள்வியுற்று அவ்வம்மை யாரை அவர் கணவனார்வாழும் பதியில்கொண்டு சேர்ப்பதே முறையென்று எண்ணினார்கள். மயில்போன்ற சாயலையுடைய அம்மங்கையை மாமணிச் சிவிகையிலேற்றிப் பாண்டியநாடு சேர்ந்து அம்மையார் வருகையைப் பரமதத்த னுக்கு அறிவித்தார்கள். புனிதவதியார் தன் நகர் அடைந்த செய்தியைக் கேள்வியுற்ற தத் தன் தன்கருத்தில் உறைந்த தெய்வத்தைக் கண் ணெதிரே கண்டவன் போல மகிழ்ந்து தன் மனைவியையும் மகவையும் உடன் அழைத்து வந்து, அம்மையாரைக் கண்டு ஆர்வத்துடன் பணிந்து அவரடியிணை தொழுதான். இவ்வாறு கணவன் தன்னை வணங்குவதைக் கண்ட புனித வதியார் அச்சம் மேற்கொண்டு தம் சுற்றத்தார் பால் ஒதுங்கி நின்றார். அதைக்கண்ட தத்தன் "அம்மையே, உமதருளால் யான் இனிது வாழ்

கின்றேன். இவ்விளங் குழவிக்கும் உமது திருப் பெயரையே அமைத்துள்ளேன்'' என்று ஆர்வத் தோடு மொழிந்தான். இப்புதுமையைக் கண்ட சுற்றத்தார் யாதுமறியாது மயங்கி, "ஐயனே, நின் மனைவியை நீ வணங்குவது முறையோ'' என்று மிகப் பணிவுடன் வினவினார்கள். அது கேட்ட தத்தன் சுற்றத்தாரை நோக்கி, "இவ் வம்மையார் மானுடரல்லர். மக்கள் வழிபடற் குரிய பெருந் தெய்வமாவார். இதனை அறிந்தே யான் அகன்றேன், அப்பால் நான் பெற்ற இம் மகவுக்கும் அம்மையார் பெயரையே அமைத் தேன்; ஆதலால் எல்லோரும் இவர் தம் பொற் பாதம் பணிந்து போற்றுதலே முறையாகும்'' என்றான்.

தன் தலைவன் குறிப்பை யுணர்ந்த புனித வதியார் இறைவனை நினைந்து, "எந்தாய், என் தலைவன் பொருட்டு இதுகாறும் நான் தாங்கி நின்ற இத்தசைப் பொதியைக் கழித்து நின் னைப் பரவுவதற் கேற்ற பேய் வடிவத்தை எனக்கு அருள வேண்டும்'' என்று தொழுது நின்றார். அப்பொழுது இறைவன் திருவருளால் அம்மையார் மெய்யில் அமைந்திருந்த தசை யெல்லாம் கழிந்து எலும்புடம்பாகி, வானமும் மண்ணு மெல்லாம் வணங்கு பேய் வடிவ மானார். இத்தெய்வ வடிவத்தைக் கண்ட

தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். வானவர் இசைத்த இசையொலி இவ்வுலகெலாம் நிறைந்தது. இதைக்கண்ட அம்மையாரின் சுற்றத்தார் தொழுது அஞ்சி அகன்று போயினர். அப்பால் அம்மையார் தம் உள்ளத்தெழுந்த பேரின்ப வெள்ளத்தால் ஓர் அற்புதத் திருவந்தாதி அருளிச்செய்து பின்னும் ஆரூத அன்பினுல் அண்ணலைக் கயிலைமலையில் கண்டு வழிபடக் கருதிப் புறப்பட்டார். வடதிசையிலிருந்த நாடுகளையெல்லாம் மனத்தினும் கடிதிற் கடந்து சென்று கயிலைமலையைச் சார்ந்தவுடன் காலினுல் நடப்பதைத் தவிர்த்துத் தலையினுல் நடந்து சென்றார். இவ்வாறு நடந்து சென்று இறைவன் இனிதமர்ந்திருந்த வெள்ளி மலைமேல் ஏறும்போது இறைவனுடனிருந்த இமயவல்லி அதிசயித்துத் "தலையினுல் இம்மலைமீதேறும் என்புடம்பின் அன்பு இருந்தவாறென்னே!" என்று மொழிந்தார். அது கேட்ட இறைவன் இமயவல்லியைநோக்கி, "உமையே, இவ்வாறு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மையென் றறிவாயாக; இப்பெருமைசேர் பேய் வடிவம் விரும்பிப் பெற்றனள்" என்று திருவாய் மலர்ந்து அவர் அருகே வந்த பொழுது "அம்மையே" என்று அன்போடு அழைத்தார். அம்மையாரும் இறைவனை "அப்பா" என்று

அழைத்து அலறி ஆனந்தக் கண்ணீர் வடித்து இறைவனது பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந்தார். இறைவன் அம்மையாரை நோக்கி, "அம்மையே, நீ வேண்டுவது யாது?" என்று வினவினார். அப்பொழுது அம்மையார் இறைஞ்சி நின்று,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க என்றார்."

"ஈசனே, உன்பால் இறவாத இன்ப அன்பு வேண்டும். இனிப் பிறவாமையாகிய பெரும் பேறு வேண்டும்; அன்றிப் பிறக்க நேரினும் உன் இணை அடி என் மனதில் வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்; எப்போதும் உன் அடியின் கீழ் அமைந்து ஆனந்தப் புகழ்மாலை பாட அருள் தரவேண்டும்" என்று அம்மையார் வணங்கி நின்றார். அன்பர்கள் விரும்பியவற்றை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய இறைவன் "அவ்வாறே ஆகுக" என்றருள் செய்து திருவாலங்காட்டில் அம்மையாருக்குத் திருநடனம்

காட்டுவதாகத் திருவாய் மலர்ந்தார். அப்பால் அம்மையார் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் தலையினாலே நடந்துசென்று திருவாலங்காடு அடைந்தார். அங்கு அழகிய கூத்தரது திரு நடனத்தைக்கண்டு ஆனந்தவாரியில் ஆழ்ந்து திருப்பதிகம்பாடி அண்ணலாருடன் இரண் டறக் கலந்து இன்பப்பே றெய்தினார்.

---

# 8. மங்கையர்க்கரசியார்

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை"

—பெரிய புராணம்.

தமிழ்மணங் கமழும் மதுரையம் பதியில் மாறன் என்னும் பெயரமைந்த அரசன் நீதி வழுவாது அரசியல் நடத்தி வந்தான். அவனது அரும் பெருங் குணங்களை அறிந்து சோழ நாட்டை ஆண்டுவந்த வளவன் தனது திருமக ளாய மங்கையர்க்கரசி என்னும் ஒப்பற்ற மங்கையை அவனுக்கு மணம் முடித்து மகிழ்ந் தான். மங்கையர்க்கரசியை மனைவியாகப்பெற்ற மாறனும் அம்மாதிடம் அளவிலா அன்பு கூர்ந்து அறநெறியில் தலை நின்றான். அரசியல் முறையில் அம்மன்னன் குலச் சிறையார் என்

னும் பெயரமைந்த அமைச்சரைக் கண்ணுகக் கருதிச் செந்நெறியினின்றும் சிறிதும் விலகாமல் செங்கோல் மன்னனென்று செந்தமிழ் நாட்டில் புகழ்பெற்ருன். அவ்வமைச்சர் காவலனை ஒரு கண்ணுகவும் குடிகளை மற்ருெரு கண்ணுகவும் கருதி எப்பொழுதும் நீதியை விடாது எடுத்துரைக்கும் வீரராய் விளங்கிஞர்.

இவ்வாறு மங்கையர்க்கு அணியாகிய மங்கையர்க்கரசியோடும் வழுதி குலம் விளங்கவந்த குலச்சிறையார் என்னும் அமைச்சரோடும் அரசன் செம்மையாய் அரசு புரியுங்கால் பாண்டிய நாடு பண்டுசெய்த பாவத்தால் சிவநெறியாகிய ஒளிநெறி மங்கி, பிறநெறியாகிய சமணநெறி பரவத் தலைப்பட்டது. மன்னவன் சமண சமயமே மெய்ச் சமயமென்று கருதி அச்சமயத்தைச் சார்ந்தான். அரசன் வழி நின்ற குடிகளும் சிவநெறியைத் துறந்து சமண நெறியைத் தழுவினர்கள். மதுரைமா நகரில் ஆலயத்திறகுச் செல்வார் குறைந்தனர். திருநீற்றின் ஒளி மறைந்து எங்கும் பாயும் பீலியும் நிறைந்தன. நாடு முழுமையும் அருகர் பாழியும் பள்ளியும் இலங்கின. இவ்வாறு பாண்டி நாட்டில் சிவநெறியானது கார்மேகத்தால் மறைக்கப் பெற்ற கதிரவன் போன்று தனது கலைகளை ஒடுக்கி ஒளியை உள்ளடக்கி நின்றது. இவ்வண்ணம் மறைந்து நின்ற ஒளி நெறியைக்காண இரு கண்

கள் எழுந்தாற்போல அந்நாட்டில் மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் இலங்கினார்கள். இவ்விரு பெருமக்களும் பாண்டி நாட்டிற்கு நேர்ந்த தீங்கினை எண்ணி எண்ணி ஏங்கினார்கள். ஆயினும் அரசன் சமண சமயத்தில் அழுந்திய பற்றுடையவனாய் அமைந்திருந்த தன்மையை அவர்கள் நன்கறிந்திருந்தமையால் தமது சைவ சீலத்தை அவன் காணாதவாறு ஒழுகி வந் தார்கள்.

இவ்வாறு இருவரும் அழிந்த சிந்தையராய் இன்ன செய்வதென்றறியாது மயங்கி யிருக் கையில் வேதநெறி தழைத்தோங்கத் தென் னாட்டில் தோன்றிய திருஞான சம்பந்தர் திரு மறைக் காட்டில் இறைவனை வழிபாடு செய்யப் போந்திருந்த நற்செய்தியைத் தாம் செய்த நல் வினைப் பயனால் கேட்டார்கள். கேட்டபொழுது இருவர் மனமும் அளவிலா மகிழ்வெய்தியது. அவர்தம் திருமுகங்கள் அன்று மலர்ந்த செந்தா மரையை நிகர்த்தன. அப்பொழுதே தூது வரை அழைத்துப் பாண்டிய நாட்டின் பரிதாப நிலைமையை அப்பெருமானிடம் எடுத்துரைத்து, அவரை அன்போடு அழைத்து வருமாறு தூது வர் சிலரை திருமறைக் காட்டிற்கு அனுப்பி னார்கள். தூதுவரும் அப்பணியை ஏற்றுக் கொண்டு, மதுரைமா நகரினின்றும் போந்து

திருமறைக்காடு சேர்ந்தார்கள். பாண்டிய நாட்டுத் தூதுவர்கள் வந்தாரென்று வாயில் காவலர் சம்பந்தப் பெருமானிடம் அறிவிக்க அப்பெரியாரும் அவரைக் காணத்திருவுளம் இசைந்து உள்ளே வரும்படி ஆணைசெய்தார். திருஞான சம்பந்தர் திருமுன் சென்ற தூதுவர் தலையினால் அவரை வணங்கி ஐயனே!

"கன்னிநா டமணர் தம்மாற் கட்டழிந் திழிந்து தங்கள்
மன்னனும் அவர்கள் மாயத் தழுந்தமா தேவியாரும்
கொன்னவில் அயில்வேல் வென்றிக் குலச்சிறை [யாருங் கூடி
இந்நிலை புகலி வேந்தர்க் கியம்பு மென்றிறைஞ்சி விட் [டார்

என்று மொழிந்தார்கள். அதைக்கேட்ட அரனடியார் அனைவரும் பாண்டிய நாட்டில் இடைக்காலத்தில் செறிந்த அமண்சமய இருளை அகற்றி, மீண்டும் ஒளி நெறியை நிலைபெறச் செய்யவேண்டுமென்று பெருமானை வேண்டினார்கள். அவ்வாறே சம்பந்தப் பெருமானும் திருவுளங்கொண்டு, சைவ சமயத்தை நிறுவுதற் பொருட்டுப் பாண்டிய நாட்டுக்கு எழுந்தருள இசைந்தார். அப்பொழுது அங்கிருந்த அப்பர் பெருமான் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த திருநாவுக்கரசர் ஞானப் பிள்ளையை நோக்கிப் "பிள்ளாய், மதுரைமா நகரில் கொடுந்தொழில் புரியும் அமணர்கள் நிறைந்துள்ளார்கள்;

அவர்கள் செய்யும் வஞ்சனைக்கோர் அளவில்லை ; ஆதலால் அங்கெழுந்தருள வொண்ணாது" என்று உளம் உருகிக் கூறினார். அவ்வருள் மொழி கேட்ட சம்பந்தர் " ஐயனே ! நம் பெருமான் கழல்களை நம்பினோர்க்கு நல்லவை யல்லாது அல்லவை அணுகுமோ" என்று தேறுதல் கூறி மதுரைமா நகரை நோக்கிப் புறப்பட்டு, இடையிலுள்ள திருப்பதிகள் யாவையும் வணங்கி நெடுங்குன்று படர் கானும் நிறைநாடும் கடந்து மதுரைமாநகர் மருங்கு வந்தணைந்தார்.

இவ்வாறு திருஞானசம்பந்தர், மதுரைமா நகரை நோக்கிப் புறப்பட்ட பொழுது அந் நகரில் அரசன் அருளால் வாழ்ந்து வந்த அமணர்கள் தீய கனாக்களும் தீய குறிகளும் கண்டார்கள். அருகப் பள்ளியின் மீதும் பாழியின் மீதும் அசோகமரத்தின் மேலும் ஆந்தையும் கூகையும் மற்றைத் தீய புள்ளினங்களும் இடையறாது பூசல் விளைத்தன. இவவாறு தாம் கண்ட துர்க்குறிகளையும் தீக்கனாக்களையும் அரசனிடம் அறிவிப்பதற்காக அமணர்கள் விரைந்து சென்றார்கள். அரச மாளிகையை அடைந்து மாறனைப் பார்த்து " ஐயனே, நாங்கள் சில தீக்கனாக்கள் கண்டு திகைத்து வந்தோம். நமது அருகப் பெருமான் இனி தமர்க்தருளும் அசோக

மரம், அப்பெருமான்மீது அடியோடு சாய்ந்து விழக்கண்டோம்; சுடுகாட்டில் நடமாடும் கண்ணுதலோன் தொண்டரெல்லாம் நமது மதுரைமா நகரில் விரவக் கண்டோம். எங்கள் கண்ணனைய காவலன் கடுந்தழலில் மூழ்கக் கண்டோம்; பின்னர் அத்தழலினின்று மீளக் கண்டோம், நமது கழகத்தில் ஓர் இளங்கன்று புகுந்து எவரும் அடக்கொணாத ஆற்றலோடு எங்கும் உடன்று ஓடி இந்நகர மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்தது. அக்கன்றின் ஆற்றலைக் கண்டு அஞ்சியோடிய மதுரைமக்கள் நிழலிலா மரங்களேறி நின்றிடக் கண்டோம்" என்று கூறி அமணர்கள் அனைவரும் அஞ்சி நின்றார்கள்.

இவ்வாறு சமணர்கள் தீக்கனாக் கண்டு திகைத்து நிற்ப அரசன் நெறி விளக்க வந்த அரச மாதேவியாரும் அமைச்சனாரும் நன் நிமித்தங்கள் கண்டு களிகூர்ந்தார்கள். அந்நிலையில் திருஞான சம்பந்தர் மதுரைமா நகரின் மருங்கணைந்தார் என்று இருவரும் நன் மொழி கனை செவியாரக் கேட்டார்கள்.

உடனே மங்கையர்க்கரசியார் தம் உள்ளத்தில் பொங்கி எழுந்த பெரு விருப்பால் அமைச்சரை நோக்கி, "எமது குலம் தழைக்க வந்த குலச்சிறையாரே! அருட்பெருகு தனிக்கட

லாய ஞானசம்பந்தப் பெருமான் நமது நகரத்திற்கு எழுந்தருளும் பெரும்பேறு பெற்றோம்; அப்பெரியாரை எதிர்கொண்டு நல்வரவேற்று அழைத்து வருக" என்று அன்போடு மொழிந்தார். அமைச்சனாரும் அப்பணியைத் தலையால் ஏற்று மதுரையின் புறத்தே போய் மறையவரை எதிர்கொண்டார். அப்பொழுது அழகிய மணி முத்துச் சிவிகையின் மேல் மதி போன்ற வெண்குடை நிழற்றத் தூயவெண்ணீறு துதைந்த திருத்தொண்டர் சூழ்ந்துவரச் சிவநெறியின் கண்ணனைய திருஞான சம்பந்தர் எழுந்தருளிவரக் கண்டார். மங்கல முழக்கமும் மறை ஒலி முழக்கமும் எங்கும் நிறைந்து இன்பம் பயந்தது. இத்தகைய கண்கொளாக் காட்சியைக் கண்ட அமைச்சனார், மெய் முழுதும் வியர்த்து, விதிர் விதிர்த்து, உச்சிமேற் கைகுவித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அடியற்ற மரம்போல் படியில் வீழ்ந்து அருந்தவப் பெரியாரை வணங்கினார். அதைக்கண்ட திருத்தொண்டர்கள் அமைச்சனார் பணிந்து நின்ற இடம் சென்று வணங்கி அவரை எழுந்திருக்குமாறு அன்போடுவேண்டினார்கள். அமைச்சரோ ஆனந்த பரவசராய் அவ்வண்ணமே பூமியில் கிடந்தார். அவ்வருஞ் செயலைக்கண்ட அடியார், அமைச்சனாரது அன்

பின் திறத்தினை அருள் வள்ளலாரிடம் அறி வித்தார்கள். சம்பந்தப் பெருமான் உடனே சிவிகையினின்றும் இழிந்து விரைந்து சென்று தமது கமலமலர் போன்ற கைகளால் அமைச்ச ரைத் தரையினின்றும் எடுத்தார். எழுந்த அமைச்சர் கைதொழுது முன் நின்றார். அப் பொழுது சம்பந்தப் பெருமான் அவரைப் பார்த்துச் "செம்பியர் பெருமான் திருமக ளாய மங்கையர்க்கரசியார்க்கும் திருந்திய சிந்தையீராகிய உமக்கும், திருவருள் பெருகுக" என்று வாழ்த்தினர். அது கேட்ட அமைச்சர் உண்ணின்று எழுந்த பேரின்பத்தை அடக்க லாற்ருதவராய்,

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி யெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப்பெற்ற பேறிதனல்
எற்றைக்குந் திருவரு ளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனு முய்ந்து
வென்றிகொள் திருநீற் ருெளியினில்
விளங்கு மேன்மையும் படைத்தனம்"

என்பதாய்ப் பெருமானை வாயார வாழ்த்தி, "ஐயனே, தாம் இங்கெழுந்தருளும் பெருமை கேட்டுப் பெரு மகிழ்வடைந்தி மங்கையர்க்கரசி யார் எதிர் சென்று அடி பணியுமாறு செய்த ஆணையை எளியேன் எற்று வந்தேன்" என்று

பொங்கிய களிப்பால் மீளவும் பணிந்து போற்றி ஞர். அது கேட்ட திருஞான சம்பந்தர் அக மகிழ்ந்து அமைச்சரை நோக்கி "இம் மதுரை மாநகரில் நம் பெருமான் திருவாலவாய் எம் மருங்கில் உளது" என்று வினவிஞர். அப் பொழுது அமைச்சஞர் சோலைகளின் நடுவே விண்ணளாவி விளங்கித் தோன்றிய கோபுரத் தைத் தம் கையிஞல் சுட்டிக் காட்டி, "இதுவே ஐயஞர் இனி தமர்ந்தருளும் ஆலவாய்" என் ருர். ஆலயத்தைக் கண்ட அருமறையாளர் தமது இரு கரங்களையும் உச்சி மேற் குவித்து வணங்கி, மங்கையர்க்கரசியாரும் மாண்புடைய அமைச்சரும் வழிபடும் பெருமை வாய்ந்த "திருவால்வாய் ஆவதும் இதுவே" என்று சிறப்பித்து,

"மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கைம் மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள் தோறும் பரவப்
பொங்கழலுருவன் பூத நாயகன்
நால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்ஞெடும் அமர்ந்த
ஆலவாய் ஆவது மிதுவே"

என்று அழகிய பாசுரம் பாடியருளிஞர்.

இவ்வாறு திருஞான சம்பந்தரை எதிர் கொண்டழைக்க அமைச்சஞரை அனுப்பி

விட்டு, மங்கையர்க்கரசியார் தம் தலைவனாய அரசனிடம் சென்று ஆலவாயில் அமர்ந்தருளும் அண்ணலாரைத் தொழுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வேண்டினர். அரசனும் அதற்கிசைய மங்கையர்க்கரசியார், தாரகைக் குழாத்தின் நடுவேயிலங்கும் தண் மதி போல ஏவலாளரும் பணிப் பெண்களும் புடைசூழ, ஆலவாயிற் சென்று ஐயனை வணங்கி, மிக ஆர்வத்தோடு அங்கு திருஞான சம்பந்தப் பெருமானை வரவேற்று நின்றார். அந்நிலையில் அமைச்சனாருடன் எழுந்தருளிய அருமறையாளரும், ஆலவாய் மருங்கணைந்து நிலமுற விழுந்து வணங்கிச் செங்கமலக் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக அழகிய திருப்பதிகம் பாடி உள்ளே சென்றார். பெருமான் எழுந்தருளும் பெருமையை அறிந்த மங்கையர்க்கரசியார், அவர் எதிரே செல்லாது ஆலவாயின் ஒரு மருங்கில் ஒதுங்கி நின்றார். அதைக்கண்ட அன்பின் வடிவாய அமைச்சனார், சம்பந்தப் பெருமானிடம் அம்மையாரைக் காட்டி "ஐயனே, இவர்தாம் மங்கையர்க்கரசி, வளவர் கோன் பாவை" என்று பணிந்தார். அதுகேட்ட பெருமான் பெருமகிழ் வெய்திப் பள்ளத்தில் பாயும் வெள்ளம்போல அம்மையார் நின்ற இடத்திற்கு

விரைந்து சென்றார். சைவ சமயம் செய்த தவப் பயனாகிய சம்பந்தப் பெருமானது திருமேனி யைக் கண்ட அரசியார் அவரது பொனனடிக் கமலங்களில் முடியுற விழுந்து வணங்கினார். அன்பினால் வழிபடும் அம்மையாரை அருமறை யோர் தம் திருக்கரத்தால் எடுத்தருளினார். அப் பொழுது அம்மையார் தம் மெல்லியமேனி சில் லென அரும்ப, அங்கயல் நெடுங்கண் அருமழை பொழிய, கொவ்வைச் செவ்வாய் குழறக் குழந் தைப் பெருமானைப் பணிந்து, "யானும் என் பதியும் செய்தவம் என்னே" என்றார். இம் மொழிகேட்ட பெருமான் அம்மையாரை எதிர் வணங்கி, "அம்மையே, சிவநெறியைப் போற்றி வாழும் செம்மை வாய்ந்த உம்மைக் காணவே இங்கு வந்தேன்" என்றார். இதைக்கேட்ட அம்மையார் ஒன்றும் பேச நாவெழாது முக மலர்ந்து பணிந்து நின்றார். அப்பொழுது சம்பந்தப் பெருமான் மங்கையர்க்கரசியாருக்கு விடை கொடுத்து மாளிகைக்கு அனுப்பிவிட்டு மந்திரியாருடன் ஆலவாயில் அமர்ந்தருளும் ஐயனாரைத் தொழுது மீண்டார். அப்பால் அமைச்சனார் அந்நகரிலிருந்த திருமடத்திற்குப் பெருமானை அழைத்துச் சென்றார். அங்கு அப் பெரியார், அடியார்களுடன் இனிதமர்ந்திருப்ப மங்கையர்க்கரசியார் ஏவலால் அன்பு நிறைந்த

அமைச்சனுர் அடியார் அனைவருக்கும் நல் விருந்தளித்தார். கதிரவனும் மேற்றிசையில் தாழ்ந்து மதுரைமா நகரெங்கும் காரிருள் நிறைந்தது.

அப்புறவிருளை நிகர்த்த அக இருளையுடைய அமணர்கள், அருமறைச் சிறுவர்மீதும் அடியார்மீதும் அழுக்காறுகொண்டு, அரசனும் அவரது மனக் கலக்கத்தை முகக்குறியால் அறிந்து நேர்ந்தது யாதென்று வினவினுன். அப்பொழுது அமணர்கள், அரசனை நோக்கி, "இறைவனே, சோழநாட்டினின்றும் சூலபாணியால் ஞானம்பெற்ற மறைச்சிருன் ஒருவன் பொடியணிந்த அடியார் குழாத்துடன் முத்துச் சிவிகை மீதேறி எங்களை வாதில் வெல்ல நின் நகர் அடைந்தான்" என்று மொழிந்தார்கள். அது கேட்ட அரசன் கடுஞ்சினங்கொண்டு "இவ்வாறு மாமறை மைந்தன் இம் மதுரைமாநகர் அணைந்தானேயாகில் அவனை யாம் செயற்பாலது யாது?" என்று செயிர்த்து வினவினுன். அமணரும் அரசன் குறிப்பை அறிந்து "அரசே, அச்சிறுவனை நாம் வலிமையால் இந்நகரினின்றும் அகற்றவேண்டாம்; அவன் தங்கியிருக்கும் மடத்தில் விஞ்சை மந்திரத்தால் தீப்பற்றுமாறு செய்வோமாயின் அவனே இந்நகரினின்றும் அகல்வான்" என்ருர்கள். அதைக்கேட்ட

அரசன் 'அவ்வாறுயின் அதனை விரைந்து செய்க' என்று ஆணைசெய்து அமணரை அனுப்பிவிட்டு அந்தப்புரம் சென்றுன்.

அரசன் அந்தப்புரம் போந்த செயலை அறிந்த மங்கையர்க்கரசியார் அங்குச் சென்று தம்முயிர்க்குயிராய் அமைந்திருந்த அரசன் வழக்கம்போல் மகிழ்ச்சியின்றி வாடியிருந்ததைக் கண்டு, அவனது மனக்கவலை யாதென்று வினவினுர்.

அதற்கு அரசன் அம்மையாரை நோக்கி "மாதே! காவிரி நாட்டிலுள்ள கழுமலத்தினின்று சங்கரன் அருள்பெற்ற சிறுவன் ஒருவன் நமது அடிகளை வாதினுல் வெல்ல இங்கு வந்துள்ளான்; அச்சிறுவனையும் அவனுடன் போந்த தொண்டரையும் அடிகள்மார் கண்டு முட்டாயினுர்கள்; யானும் அதனைக் கேட்டு முட்டாயினேன்; இதுவே என் வாட்டத்திற்குக் காரணமாகும், வேறில்லை' என்றுன். இம்மொழி கேட்ட மங்கையர்க்கரசியார், இன்பமும் துன்பமும் ஒருங்கே அடைந்தார். சமணசமய அடிகளை வாதினில் வென்று சிவநெறியை மீண்டும் நிறுவுதற்கு வந்த திருஞான சம்பந்தர் திறத்தைக் கண்டு களிகூர்ந்தார். ஆயினும் கொல்லாமையும் பொய்யாமையும் சிறந்த அறமெனச் சொல்லிக்கொண்டு கொடுந்தொழில் புரியும் இயல்

பமைந்த அமணர்கள் பாலருவாயினராகிய பெருமானை என்ன வஞ்சனை செய்வரோ என்று ஏங்கினார். ஆயினும் தமது மனநிலையை மன்னவன் அறியாதவாறு மறைத்து, 'ஐயனே! தாம் சொல்லியவாறு இரு சமய வாதிகளும் வாது செய்தால், வென்றவர் நெறியைப் போற்றுதலே உயிர்க்குறுதி பயப்பதாகும்' என்று அரசனிடம் எடுத்துரைத்தார். அதற்கு அரசன் ஒன்றும் மறுமொழி சொல்லாது எழுந்து சென்றான். நூலறிவோடு நுண்ணறிவுமுடைய அமைச்சனார் மங்கையர்க்கரசியார் இருந்த இடம் போந்து அம்மையாரை ஆர்வத்தோடு வணங்கி, "அரசி! ஞானக் கதிராகிய ஞானசம்பந்தர் நமது நகரணையும் பெரும்பேறு பெற்றோம். அரன் அடியார்களைக் கண்டு ஆனந்தமடைந்தோம்; 'இனிச் சமணர் செய்யும் வஞ்சனை யாதோ அறியோம்" என்றார். அது கேட்ட அம்மையார், முகம் வாடி "அமணர்தம் சிறுமையால் நமது பெருமானுக்குத் தீமை நேருமாயின் நாமும் உயிர் துறந்து ஒழிவோம்" என்று உறுதி கொண்டார்.

இஃதிவ்வாருக, மன்னனைக் கண்டு மடத்தில் தீக்கொளுவ ஆணை பெற்றுச் சென்ற அமணர்கள் தமது மந்திர வலிமையால் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தில் தீயினை

ஏவினர்கள். ஆனால் அம்மந்திரங்கள் ஆதி மந்திரமாய ஐந்தெழுத்தோதும் அடியார்மீது செல்ல வலியற்றிருந்தமையால் அவர்கள் எண்ணிய எண்ணம் முற்றுப்பெறு தொழிந்தது. தமது மந்திரம் வலியிழந்த தன்மையை மன்னவன் காணில் தமது மேன்மையும் பெருமையும் அழியும் என்றறிந்த தீயோர் அத் திருமடத்தில் தாமே தம் கைகளால் தீயினை வைத்தார்கள். தீயினைக் கண்ட சிவனடியார் திகைத்து எழுந்தோடி, அத் தீச்செயல் செய்தோர் அமணரே என்று தெளிந்து திருஞான சம்பந்தரிடம் சென்று முறையிட்டார்கள். அது கேட்ட பெருமான் பெரிதும் உளம் வருந்தி, மாதவர் துயிலும் இத்திருமடத்தைப் பாவிகள் பழுது செய்யத் துணிந்தனரே யென்று பரிவுகொண்டு, அச்செயல் நேர்ந்ததற்குக் காரணம், அரசனது நெறியிலா முறையே என்றுணர்ந்து,

"வெய்ய தீங்கிது வேந்தன்மேற் றேனும் விதிமுறையல்ல
செய்யனே திருவாலவா யேனுந் திருப் பதிகஞ்
சைவர் வாழ்மடத் தமணர்க ளிட்டதீத் தழல் போய்ப்
பையவே சென்று பாண்டியற் காகெனப் பணித்தார்."

அடியார்கள் தங்கிய திருமடத்தில் அமணர்கள் இட்ட தீத்தழல்போய் 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பெருமான் பணித்தவுடன் அவ் வெந்தழலின் வெம்மை சென்று

மன்னவன் மேனியைத் தாக்கிற்று. அப்பொழுது அந்நகரில் நிறைந்து நின்ற இருள் நீங்கிக் கதிரவன் குணதிசையில் எழுந்தான்; அரசர்க்குற்ற தீப்பிணியைத் தெரிந்த அமைச்சரும் அரசியாரும், அத்தீ நோய், அமணர்கள் அடியார் திருமடத்தில் வைத்த தீயினால் விளைந்ததேயாம் என்று துணிந்தார்கள். மன்னனது வெம்மைநோய் தீர்த்தற்குக் கையிற் பீலி தாங்கிய அமண அடிகள் சூழ்ந்து நிறைந்தார்கள்; மருத்துவ நூலோர், தம் கலைகளில் வகுத்து திருந்திய முறைகள் யாவையும் செய்தும் அவ் வெப்பு நோய் அடங்காது மேன்மேலும் உருத்தெழுந்து அரசனது உயிரையும் உருக்குவதாயிற்று; மன்னனும் கருத்தொழிந்து உரை மறந்தான்; அமணர்கள் தமது நூல்களில் வகுத்த மந்திரங்களை நவின்று பீலிகொண்டு முன்னும் பின்னும் மன்னவன் மேனியில தைவரும்பொழுது வெப்புநோய் மேன்மேலெழுந்து தீப்பொறி சிதறி விழக்கண்ட அனைவரும் அதிசயித்து அஞ்சி நடுங்கினார்கள். அமணர்கள் கரக நீர் தெளித்து அருகனே காவாய்! காவாய்! என்று ஓதும்பொழுது அந்நீர் எரிதழலிற் சொரிந்த நெய்போல நோயின் வெம்மையைப் பெருக்கியது கண்ட அரசன் அவரைப்பார்த்து 'நீங்களெல்லோரும் இவ்விடம் விட்டு அகலுங்கள்' என்று உரைத்து உணர்வு சோர்ந்தான்.

அதுகண்ட மங்கையர்க்கரசியார் மனம் நடுங்கி அறிவினால் மிக்க அமைச்சரை நோக்கி, "அந்தோ, திருமறையாளர் திருமடத்து அமணர்செய்ததீங்கு இவ்வாறு முடிந்ததோ" என்று புலம்பினார். அதன் உண்மையை அமைச்சனாரும் அறிந்து "அருகர் தம் சிறுமையால் நேர்ந்த நோயினை எவ்வாற்றானும் மருந்தினால் தீர்த்தற் கரிதாகும். இந்நோய்க்கு மருந்து சிவநெறிச் செஞ்சுடராய சம்பந்தப் பெருமானே யாவர். அப்பெருமான் கடைக்கண்ணால் அரசனை அருளோடு நோக்கினால் இத் தீப்பிணியே யன்றிப் பிறவிப் பெரும்பிணியும் தீரு" மென்றார். திருஞான சம்பந்தர் என்னும் திரு நாமம் மன்னனது செவியிற் புகுதலும் அவனும் சிறிது அயர்வு நீங்கி 'அம்மறைச் சிறுவர் அருளால் இந்நோய் அகலுமேயாயின் அவரை இங்கு அழைத்து வருக' என்றான். அப்பொழுதே மங்கையர்க்கரசியார் மாமணிச்சிவிகை ஏறி அமைச்சனாரோடு அரு மறையோரது திருமடத்தைச் சேர்ந்தார். அங்கு,

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

கண்ட பொழுது இருவரும் அமணர்கள் செய்த கடுந்தொழிலை நினைந்து கண்ணீர் பெருக்கி உச்சி

மேற் கைகுவித்து நிலமுற விழுந்து தொழுதார் கள். அப்பால் அப்பெருமான் முன்னே எழுந்து நின்று "ஐயனே! வஞ்சகராய அமணர்கள் செய்த தீத்தொழில் போய் மன்னவன்பால் வெப்பு நோயாக நின்று வாட்டி வருத்துகின் றது, அவ்வமணர்கள் அளித்த மருந்தாலும் நவின்ற மந்திரத்தாலும் அந்நோய் தீராது பெருகிற்று; இப்பொழுது தீப்பிணியால் வருந் தும் மன்னவன் அறியுமாறு மறத்தொழில் புரிந்த அமணரை வென்றருளத் திருவுளம் கொண்டால் எமதுயிரும் அரசனுயிரும் உய்யு" மென்று உரைத்தார்கள். இவ்வாறு அன்பர்கள் இருவரும் அகங்குழைந்து வேண்ட அதற்கு அண்ணலாரும் இனிது இசைந்தார்.

என்றவர் உரைத்தபோதில் எழில்கொள்பூம் புகலிவேந்தர்
ஒன்றும்நீர் அஞ்சவேண்டாம் உணர்விலா அமணர்தம்மை
இன்றுநீர் உவகையெய்த யாவருங் காண வாதில்
வென்று மீனவனைவெண்ணீறணி விப்பன் விதியாலென்றார்.

அதுகேட்ட அமைச்சனாரும் அம்மையாரும் முகமலர்ந்து இறைஞ்சி "ஐயனே! தென்னாடு செய்தவத்தால் செழுமுத்துச் சிவிகையின் மேல் தாம் இங்கெழுந்தருளப் பெற்றோம்; இனி எமக்கு யாதொரு குறையுமில்லை" யென்று வணங்கினார்கள். திருஞான சம்பந்தப் பெருமா னும் திருவுளம் மகிழ்ந்து ஆவதும் அழிவதும் ஐயனார் செயலேயாகும். ஆதலால் இறைவன்

திருவுளம் அறிவோம் என்று திருவாலவாயிற் சென்றார். அம்மறையவருடன் முழுநீறு பூசிய முனிவரும் ஐந்தெழுத்தோதும் அடியாரும் உச்சிமேற் கைகுவித்துப் பின் சென்றார்கள். ஆலவாயிற் சென்ற அண்ணலார் இறைவனை இனிது நோக்கி, ஐயனே,

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில்வென் றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே."

என்று பதிகம் பாடி யருளினார். இறைவனும் அமணரை வாதினில் வெல்ல ஆணை தந்தார். அதனை அருள் ஞானசம்பந்தர் ஆர்வத்தோடு ஏற்று மன்னவன் மாளிகை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது வெண் சங்கங்கள் முழங்கின; தாரைகள் பூரித்து ஆர்த்தன; மங்கல மறைகள் முழங்கின; அரனடியார் ஆரவாரித்தனர்; அழகிய முத்துச் சிவிகைமீது அருமறையாளர் எழுந்தருளினார். மதுரைமா நகரின் மாடவீதி வழியாய்ச் சென்று அரசனது அரண்மனை அடைந்தபோது அமைச்சனார் அப்பெரியார் வரவை அரசனிடம் அறிவித்தார். அப்பொழுதே அரசன் சிறிது அயர்வு நீங்கி, அப்பெருமானது பெருமைக் கேற்பப் பீடம் ஒன்றைத் தன் தலைப்பக்கத்தில் அமைக்குமாறு

பணிந்தான். அமைச்சனாரும் அதனை நொடிப் பொழுதில் செய்து முடித்தார். அப்பால் மன்னவன் ஏவலால் அமைச்சனார் மறையவரை எதிர்கொண்டழைக்க மாளிகையின் புறத்தே சென்றார்.

அருமறைப் பிள்ளையும் செந்தமிழ் நாடு செய்தவக் கொழுந்து போன்று அரண்மனை வாயிலை அடைந்து முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, அரசன் இருந்த இடம் சென்றார்; அரசனும் அருமறையாளரைக் கண்டான்; அடக்கொணாத ஆனந்தமடைந்தான்; அப் பெரியாரைக் கையெடுத்து வணங்கி அருகே யிருந்த ஆசனத்தில் அமருமாறு செய்தான்; அப்பொழுது காலையெழுங் கதிரவனைச் சூழுங் கருமுகில்போல் அமணர்கள் அருமறையாளரைச் சூழ்ந்தார்கள். அமணர்களது கருமேகம் போன்ற உருண்டு திரண்ட பெருமேனியையும் பச்சைக் குழந்தையாகிய பாலரூ வாயரின் சிறிய திருமேனியையும் கண்ட அம்மையார் அகம் குழைந்து வருந்தி முகம் புலர்ந்து நின்றார்; அக்குறிப்பை அறிந்த அருமறைச் சிறுவர் அம்மையார் மனவாட்டம் திருத்துமாறு

மானினேர் விழி மாதராய் வழுதிக்கு மா பெருந் தேவி கேள்
பானல் வாயொரு பால னீங்கிவ னென்றுநீ பரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய விடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட் கெளியே னலேன் திருவாலவாய் அரன் நிற்கவே

என்று அழகிய திருப்பதிகம் பாடி யருளினர்; அதுகேட்ட அம்மையார் மனம் தெளிந்து உறுதி கொண்டார்; மன்னவன் அங்கு நிறைந்து நின்ற அமணரையும் அருமறையாளரையும நோக்கி, என்னை வாட்டி வருத்துகின்ற இத்தீப் பிணியைத் தீர்த்தவரே வாதில் வென்றவராவார் என்று மொழிந்தான்; அம்மொழிகளைக் கேட்ட அமணர்கள் அரசனது இடப்பாகத்தில் அமைந்த வெப்புநோய் தீர்த்தற் கெளிதாம் என்றெண்ணி அம்மருங் கடைந்தார்கள். அருமறையாளரும் அரசனது குறிப்புணர்ந்து அவனது வலப்பக்கத்தில் அமைந்த வெப்பைத் தீர்க்குமாறு அம்மருங் கணைந்தார். அமணர்கள் பீலிகொண்டு இடப்பக்கத்தைத் தைவந்தார் கள்; அருமறையாளர் திருநீற்றை மருந்தாகக் கொண்டு மந்திரத்தால் மறை மொழி அருளி னர். அப்பொழுது மன்னவன் வலப்பாலிருந்த வெப்பனைத்தும் இடப்பாலடைந்து அழலெனஎரித்து ஆற்றெணுத் துயர் விளைத்தது. அது கண்ட அமணர்கள் அஞ்சி நடுங்கினர்கள். இவ்வாறு தன் மேனியில் ஒரு பால் வெம்மையும் ஒருபால் தண்மையும் எய்திய,

மன்னவன் மொழிவான் என்னே மதித்த இக்கால மொன்றில்
வெந்நர கொருபா லாகும் வீட்டின்ப மொரு பாலாகும்
துன்னுநஞ் சொருபா லாகும் சுவையமு தொருபா லாகும்
என்வடி வொன்றி னுற்றேன் இருதிறத் தியல்பு மென்ருன்.

இவ்வாறு மன்னவன் மேனியில் வெந்நரகமும்

வீட்டின்பமும் ஒருங்கே சேர்ந்தாற் போலவும் தியநஞ்சும் தீஞ்சுவை யமுதும் ஓரிடம் நிலைத்தாற்போலவும் அமைந்திருந்ததைக் கண்ட அரசன் அமணரை அவ்விடம் விட்டு அகலுமாறு பணித்து அருமறையாளரைத் தனக்கு அருள் புரியுமாறு வேண்டினான். அவரும் முன்னமே எடுத்த மருந்தும் மந்திரமும் கொண்டு, மன்னவன் வெப்புநோய் முழுமையும் நொடிப் பொழுதில் அகற்றினார். அப்பொழுது அரசன் அளவிலா ஆனந்தம் எய்தி உச்சிமேற் கை குவித்து "அடியேனை அஞ்ஞான இருளினின்றும் எடுத்து மெய்ஞ்ஞான நெறிகாட்ட வந்த திருஞான சம்பந்தர் திருத்தாள் பணிந்தேன்; வாழ்ந்தேன்" என்றான். மன்னவன் பிணி தீர்ந்ததைக் கண்ட மங்கையர்க்கரசியாரும் அமைச்சனாரும் சம்பந்தப் பெருமானது பாத தாமரை பணிந்து, 'இன்று பெறற்கரிய பேறு பெற்றோம்; மன்னனும் இனிப் பிறவாத பெரும் பேறு பெற்றான்,' என்று பெருமகிழ் வெய்தினார்கள்.

அப்பால் பொய்மையை மெய்யாகக் கொண்ட அமணர்கள் ஞானசம்பந்தப் பெருமானோடு நீரிலும் நெருப்பிலும் வாதாடித் தோற்றுத் தாம் அரசனிடம் வஞ்சினம் கூறியவாறு கழுவிலேறி உயிர் துறந்தார்கள்; செந்தமிழ்

நாட்டில் மீண்டும் சிவமணங் கமழ்ந்தது; அரசனும் தூய வெண்ணீறு துதைந்து, அழகிய அக்கமணிகள் அணிந்து இறைவன்பால் இடையருத அன்பு கொண்டு சிவநெறியைப் போற்றினன். அருமறைப் பெருமானும் அகம் மகிழ்ந்து மன்னவனை வாழ்த்தி,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே"

என்று அழகிய பதிகம்பாடி அருளினர். அவ்வாறே பாண்டிய நாட்டில் பல்வகை வளங்களும் நிறைந்து அறம் வளர்ந்தோங்கிற்று; தீப்பிணி தீர்ந்த மன்னவனும் அவனை நல்வழிப் படுத்திய மங்கையர்க்கரசியும் எப்பொழுதும் இறைவன்பால் இறவாத அன்பு கொண்டு வணங்கி இறுதியில் ஈசனுடன் இரண்டறக் கலந்து இன்பப்பேறெய்தினர்கள்; காவலனது கண்போலமைந்த குலச்சிறையார் என்னும் அமைச்சரும் அவ்வாறே அழியாத இன்பப்பேறெய்தினர். இவ்வாறு தனது பதியையும் காத்துத் தமிழ் நாட்டில் சிவமணங் கமழுமாறு செய்த மங்கையர்க்கரசி என்னும் மாண்புடைய தெய்வத்தைப் பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழார்,

"மங்கையர்க்குத் தனி யரசி யெங்கள் தெய்வம்
வளவர் திருக் குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திரு மடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
யிருந் தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே."

என்று வாயார வாழ்த்தி வழிபடுகின்றார்.

---

## 9. திலகவதியார்

"அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்."

**திருமுனைப்பாடி** நாட்டில் திருவாமூர் என்னும் திருப்பதியில் வேளாளர் பெருங் குலத்தில் புகழனார் என்னும் பெரியார் சிவநெறியிற் சிறிதும் வழுவாமல் செம்மையாய் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியாராய் அமைந்த மாதினியார் மங்கையர்க்கு அணிகலனாய்க் கண்ணிற் பொருந்திய ஒளிபோல் காதலினுடன் ஒன்றுபட்டு இல்லறம் நடத்தி வந்தார். இம்மாதினியார் மணிவயிற்றில் திருமகள் போன்ற அழகமைந்த திலகவதியார் பிறந்தார். அம் மங்கை அழகின் கொழுந்தெனக் கண்டோர் மனங்களிக்க வளர்ந்து வருகையில் உலகில் நிறைந்திருந்த இருள் நீக்க எழுந்த ஒளிபோல

மருணீக்கியார் என்னும் மைந்தரும் திலகவதியாரது தம்பியாய்த் திருவவதாரம் செய்தார். செங்கதிரும் தண்மதியும் ஒருங்கே விளங்கினாற் போல மருணீக்கியாரும் திலகவதியாரும் புகழனூர் திருமனையில் வளர்ந்து வந்தார்கள். இளமையிலேயே திலகவதியார் மன்னுயிர்பால் அன்பும் அருளும் நிறைந்தவராய் இறைவன்பால் இடையறாத ஆர்வம்கொண்டு அறநெறியில் தலை நின்றார். அவரது மாசிலா மனப்பான்மையை அறிந்த மருணீக்கியார் அவர்பால் பேரன்பு பூண்டு வாழ்ந்தார்.

இவ்வாறு இருவரும் இனிது வளர்ந்து வருகையில் திலகவதியார் பன்னீராட்டைப் பருவமுற்றுக் கற்பகத்தின் பூங்கொம்பு போன்று கவின்பெற விளங்கினார். அவ்வழகிய நங்கையை இல்லற வாழ்க்கையிற் செலுத்த எண்ணிய அவரது பெற்றோர் தக்க குலமும் குணமும் வாய்ந்த ஓர் மணமகனை நோக்கிய மனப்பான்மையராய் இருந்தார்கள். அவ்வாறிருக்கையில் இறைவன்பால் நிறைந்த அன்பும், வேளாண்மை யென்னும் விழுமிய பணியும் பொருந்திய ஓர் பெருங்குடியில் கலிப்பகையார் என்னும் வீரர்பெருமான் இளமையும் ஆண்மையும் ஒருங்கே அமைந்து அடலேறு போன்று விளங்கினார். திலகவதியாரைத் தமது வாழ்க்கைத்துணையாக

அமைத்துக்கொள்ள விரும்பிய கலிப்பகையார் தம்து நோக்கத்தைச் சில முதியோர் வாயிலாகப் புகழனார்க்கு அறிவித்தார். அவரும் தமது திருமகளை அவ்வீரர் பெருமானுக்கு மனைவி யாகக் கொடுக்க மனம் இசைந்தார். இவ்வாறு திலகவதியாரின் தந்தையார் திருமணத்திற்கு இசைந்த மனப்பான்மையை மணம் பேசி வந்த முதியோர் கலிப்பகையாரிடம் அறிவித்தார்கள். அவரும் தமது கருத்திற்கினிய காதலியை அடையும் பேறு பெற்றமையைக் குறித்து அக மகிழ்ந்தார். ஆயினும் அத் திருமணத்துக்கு ஏற்ற காலத்தைக் குறிப்பதன் முன்னர் கலிப் பகையார் அரசனது ஆணையால் அயல்நாடு சென்று மாற்றருடன் போர்புரிய நேர்ந்தது. அவ்வாணையை ஏற்ற வீரர் பெருமான் அப்பொழுதே போர்க்கோலம் பூண்டு தானைத் தலைவராய் மாற்றரது கூற்றென விரைந்து சென்றார். அரசனது படைகளை அணிவகுத்து அடலேறு போன்று அமர்க்களத்திற் புகுந்து பலநாள் பகைவருடன் கலிப்பகையார் கடும்போர் விளைத்தார்.

இஃதிவ்வாறிருக்கத் திலகவதியாரது தந்தையார் தீப்பிணியுற்று உயிர் நீத்து விண்ணுலகடைந்தார். கணவனார் இறந்த கடுந்துயரம் பொறாது மாதினியாரும் மக்கள் இருவரையும் மயங்கவிட்டுத் தாமும் உயிர்துறந்தார். இவ்

வாறு பெற்றோரிருவரும் தம்மைப் பிரிந்த துய ரத்தால் திலகவதியாரும் அவர் தம்பியாரும் பெருந்துயரில் அழுந்தினார்கள். பின்னர் தம் பெருங் கிளைஞர் கூறிய மென்மொழிகளால் ஒருவாறு மனந் தேறி விண்ணுலகடைந்த பெற் றோர்க்கு விதி முறைப்படி நீர்க்கடன் முடித் தார்கள். அந்நிலையில் கலிப்பகையார் என்னும் ஒப்பற்ற வீரர் போர்க்களத்தில் பூதவுடம்பை நீத்துப்புகழுடம் பெய்தினாரென்ற தீச்சொல் வெந்த கொடும்புண்ணில் வேல் எறிந்தாற்போல திலகவதியாரது திருச்செவியில் நுழைந்தது. அப்போது அம்மையார் சிந்தை திரிந்து, திகைத்து அயர்ந்து தம் உயிரையும் தலைமகனார் உயிரோடு விண்ணுலகில் இசைவிக்கத் துணிந்தார்.

"எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள்
அந்தமுறை யாலவர்க்கே யுரியதுநா னாதலினால்
இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்ப னெனத்துணிய
வந்தவர்தம் மடியின்மேன் மருணிக்கி யார்விழுந்தார்."

"எனது அன்பார்ந்த தந்தையாரும் அன்னை யாரும் என்னைக் கலிப்பகையாரென்னும் பெரி யார்க்கு மனைவியாகக் கொடுக்க இசைந்தார்கள். அவ்வாறு எனது இருமுது குரவரும் இசைந்த முறையால் நான் அக் கலிப்பகையாருக்குரிய உடைமையாய் விட்டேன். ஆதலினால் அவர் இறந்த உரை கேட்டபின் நான் ஒரு சிறிதும்

உயிர்வாழ ஒருப்படேன். இவ்வுலகினின்றும் நீங்கிய அவருயிரோடு என்னுயிரை விண்ணுலகில் இசைவிப்பேன்" என்று திலகவதியார் துணிந்து உயிர்துறக்கக் கருதினார். இக் கருத்தை யறிந்த மருணீக்கியார் திலகவதியாரின் திருவடிகளில் விழுந்து அழுது கண்ணீர் பெருக்கி "அம்மையே, எனது அன்னையும் பிதாவும் அகன்ற பின்னர் நான் உம்மையே நம்பி உயிர் தாங்கி யிருக்கின்றேன். நீரும் என்னை இவ்வுலகில் தனியே விட்டு இறக்கத் துணிந்தால ஏழையேன் எவ்வாறு உயிர்தரிப்பேன். நானும் உம் கண்ணெதிரே உயிர் நீத்து இவ்வுலகினின்றும் நீங்குவேன்" என்று அழுது கண்ணீர் பெருக்கினார். தம் முயிர்மேல் சிறிதும் பற்றில்லாத திலகவதியார் தம்பியாரது கண்ணீரைக் கண்டு உளம் கரைந்தார். அவரது மனத்துணிவைக் கண்டு கலங்கினார். எவ்வாறாயினும் தமது அருமைத் தம்பியார் உயிர்வாழ வேண்டுமென்னும் உயரிய எண்ணம் அம்மையார் உள்ளத்தில் உதித்தது.

"தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா
உம்பர் உலகணைய வுறுநிலை விலக்க உயிர் தாங்கி
அம் பொன்மணி நூல் தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதியார் இருந்தார்"

திலகவதியார், தமக்காக உயிர்வாழ இசைந்தது கண்டு மருணீக்கியார் துயரொழிந்து உல

இன் நிலையாமையை உணர்ந்து நல்லறங்கள் செய்யத் தலைப்பட்டார். இவ்வாறு அருள் நெறியை மேற்கொண்ட மருணீக்கியார் முன் வினைப் பயனாய்ச் சைவ சமயத்தை நீத்துச் சமணசமயம் சார்வாராயினர். அச்சமய நூல்களை யெல்லாம் ஆர்வத்தோடு பயின்று அறிவினால் தலைசிறந்த மருணீக்கியார் தருமசேனர் என்னும் புதுப்பெயர் புனைந்து அருக நெறியில் தலை நின்றார். அப்பொழுது திலகவதியார் சிவ நெறியே நன்னெறி யெனக்கண்டு இறைவன் பால் ஆராத அன்புடையராயத் திருவதிகை வீரட்டான மென்னும் திருப்பதியை அடைந்து மாசிலா வெண்ணீறும் கண்மணியும் அணிந்து ஆலயத்தில் தமது கமலமலர் போன்ற கைகளால் தினந்தோறும் திருப்பணி செய்வார் ஆயினர். ஆலயத்தில் நாள்தோறும் அலகிட்டு மெழு கிட்டுப் பூமாலை புனைந்தமைத்து அம்மையார் திருப்பணிகள் செய்து வரும்போது தமதுதம்பி யார் சிவநெறியினின்றும் விலகிய செயலை எண்ணி யெண்ணி உள்ளம் கரைந்து உருகுவா ராயினர். அநுதினமும் அம்மையார் இறை வனை வழிபடும்பொழுது 'ஐயனே, அடியேனை யாட்கொண்ட அருள் வள்ளலாகிய நீ என்பின் பிறந்தவனாகிய மருணீக்கியானது மருளையும் நீக்கி அவனைப் பிறசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்' எனப் பன்முறையும் பணிந்து

வேண்டுவாராயினர். திலகவதியாரது மனக் கவலையை யறிந்த இறைவன் அவரது கனவிற் ருேன்றி "அருந்தவமுடையாய், உனது மனக் கவலை மாற்றுவாய்; உன்னுடன் பிறந்தான் முன்னமே முனியாகி என்னை அடையுமாறு முனைந்து தவமியற்றியுள்ளான். ஆதலால் சூலை நோயை அவன்பால் அனுப்பி விரைவில் ஆட்கொள்வோ" மென்று திருவாய் மலர்ந்து மறைந்தனர். அவ்வாறே இறைவன் அருளால் கடுங்கனல்போன்ற கொடுஞ்சூலை தருமசேனரது வயிற்றில் சென்று சேர்ந்தது. அந்நோய் கடுங் கனலுங் குழைத்தாற்போன்ற கடுமையுடன் அவரை வாட்டி வருத்தினமையால் அதன் வெம்மைக்கு ஆற்ருது அப்பெரியார் அமண் பாழியில் குழைந்து விழுந்தார். தமது தலைவர்க் குற்ற தீப்பிணியை மருந்துகளாலும், மந்திரத் தாலும் அகற்ற முயன்ற அமணர்கள் அவற்ருல் அவ்வேதனை நோய் ஓங்கி யெழுவதைக் கண்டு உள்ளங்கவன்று விடமுண்ட மீனைப்போல வெய்துயிர்த்தார்கள். நோயைத் தீர்க்குமாறு அறியாது அந்தோ இக்கொடிய நோயைப் போக்க எம்மால் இயலாது எனப் புகன்று கைவிட்டார். அந்நிலையில் சூலைநோயின் வெம்மையால் தருமசேனர் மதிமயங்கி இனித் தம் நிலையைத் திலகவதியாருக்கு உணர்த்துதலே

முறையென்று துணிந்து ஓர் பணியாளனை அவர் பால் அனுப்பினார். ஏவலாளன் திருவதிகை நகர் அடைந்து திலகவதியாரைத் திரு நந்தன வனத்திற் கண்டு "அம்மையே,

'கொல்லாது சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
யெல்லாருங் கைவிட்டா ரீதுசெயலென் முன்பிறந்த
நல்லாள்பாற் சென்றியம்பி நாளுய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவா யென்றுரைசென் றறிவித்தான்.'

உமது தம்பியார் சூலைநோயால் குடர் முடக்கி ஆற்ருறாத் துபரமடைந்தார். அந்நோயைத் தீர்க்கப் போந்த அமணரெல்லாம் அறவே கை விட்டார். அதன்மேல் அவர் நிலையை உம்மிடம் அறிவித்து அவர் உய்யும் வழியை அறிந்து வருமாறு என்னை யனுப்பினார்" என்றான். ஏவலாளன் இவ்வாறு கூறுதலும் திலகவதியார் தம்பியாரது நிலை அறிந்து வருந்தினாரேனும் "அப்பா! உன்னோடு நன்கறியாத அமணர் பள்ளியில் நான் செல்லேன்; இச்செய்தியை அவனிடம் எடுத்துரைப்பாய்" என்று மொழிந் தார். ஏவலாளனும் மீண்டுபோய்த் தருமசேன ரிடம் நிகழ்ந்ததை ஒன்றும் விடாமல் எடுத் துரைத்தான். அதுகேட்ட தருமசேனர் அயர் வுற்று "இதற்கு இனி யான் என் செய்வேன்" என்று சிறிது நேரம் திகைத்திருந்தார். அப் போது ஈசன் அருளால் அகவுள்ளத்தில் சிவ நெறியில் வாழும் திலகவதியாரது திருவடியை

அடையவேண்டும் என்னும் ஆர்வம் பிறந்தது. அப்பொழுதே சமண சமய சின்னங்களைத் துறந்து வெள்ளிய ஆடை உடுத்து கைத்தாங்கலாக செய்தவ மாதவர் வாழும் திருவதிகை சென்றடைந்தார். அங்கு தமது முன் பிறந்த அம்மையாரைக்கண்டு அவரடியிணையில் முடியுற விழுந்து வணங்கி நமது குலம்செய்த நற்றவப் பயனே! எனது புல்லியவுடல் சூலைநோயால் வருந்துகின்றது; அதன் வெம்மைக்கு ஆற்ருது உம்மை யடைந்தேன்; இனி நான் உய்ந்து கரையேறும் நெறியை உரைத்தருள வேண்டும் என்று பணிந்தார். இவ்வாறு தனிப் பிணியால் வருந்தும் தம்பியாரை திலகவதியார் அருளோடு நோக்கி எழுந்திருக்குமாறு பணித்தார். அவரும் உற்ற நோயால் உடல் நடுங்க எழுந்து தொழுது நின்ருர். அப்பொழுது திலகவதியார் அவரை அருளோடு நோக்கி "ஐயனே, ஈசனருளால் உனக்கு இந்நோய் வந்தது. ஆதலால் நம் பெருமான் பாதம் பணிந்து பணிசெய்வாய்" எனப் பணித்து அருவினைபோக்கும் ஐந்தெழுத்தை திருநீற்றில் ஓதி யளித்தார். அம் மாசிலா வெண்ணீற்றை மருணீக்கியார் பணிந்தேற்று மெய் முழுதும் அணிந்து திலகவதியாரது பின்னே சென்ருர். அவ்வம்மையாரும் தம்பியாருடன் ஆலயத்திற்குச் சென்று வலம் வந்து அங்கு அமர்ந்தருளிய ஐயனரை வணங்கி தரையில் விழுந்து பணிந்து இறைவன் திருவருளால் பாமாலை பாடும் பான்மை எய்தி அழகிய திருப்பதிகம் பாடினர். அப்பொழுது அவரை வாட்டி வருத்திய சூலை

நோய் அறவே யொழிந்தது. இதைக் கண்ட பெரியார் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி இறைவனது கருணைத் திறத்தை வியந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய்ப் பொழிய பூமியின்மீது விழுந்து புரண்டு 'ஐயனே! அடியேனது சிறுமை யெல்லாம் பொறுத்து அருள் செய்த உனது பெருமையை என்னென்று சொல்லிப் புகழ்வேன்' என்று பலவாருகத் துதித்துப் பரவசமாகி நின்ருர். அப்பொழுது அங்கு நின்ருர் எவருமறிய "இவன் பாவுற்ற செந்தமிழால் பதிகம் பாடிய பான்மையிஞல் இவனை நாவுக்கரசன் என்று இனி யேழுலகும் போற்றுக" என்று ஆகாயவாணி ஒலித்தது. அதுகேட்ட நாவுக்கரசர் இறும்பூ தெய்தி இறைவனது அளப்பருங் கருணையை எண்ணி யெண்ணிக் கண்ணீர் உகுத்தார். அன்று முதல் திருப்பணி செய்யுந் திறத்தை மேற்கொண்டு மெய்யில் திருநீறும், கையில் உழவாரமும் தாங்கி அரனுர் உறையும் ஆலயந்தோறும் சென்று அன்பிஞற் பணி செய்து பத்திமையாற் பாமாலை பாடி இடையே யெய்திய இன்னல்களையெல்லாம் வென்று இறுதியில் இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் எய்திஞர். இவ்வாறு தமது தம்பியாரைத் திருந்திய சிவநெறியில் செலுத்திய திலகவதியாரும் சிவபெருமானது செய்ய திருவடிகளை நாடோறும் வணங்கித் திருப்பணிகள் செய்து இறுதியில் அப்பெருமானது இணையடி சேர்ந்து இன்புற்ருர்.

முற்றிற்று.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MADRAS.

Rao Bahadur
.. S. SRINIVASACHARI, M.A.,
PROFESSOR OF HISTORY AND POLITICS
ANNAMALAI UNIVERSITY

ANNAMALAINAGAR

*Dated, 11—8—1943.*

**'Tamilar Charitram'** by Mr. N. S. Kandiah Pillai, deals with the various theories put forward as to the probable original *habitat* of the Tamils on the assumption that they were immigrants into India and not autochthones, and then with the Indus Valley culture, the identity of the Sumerians and the ancient Dravidians, the affinities of the Tamil tongue, the indigenous origin of the race and their association with the Aryans. Then it deals with the physical divisions, the ethnic and social gradations, the ideas, religious and cultural of the early Tamils and their civilisation as depicted in the works of the Sangham Age. The book displays a high degree of clarified learning and clear presentation of difficult and abstruse theories and ideas and is efficiently documented, being always accurate and secure in data. It is a creditable indication of historical and ethnological scholarship.

**'Tamilagam'** by the same writer deals with a variety of topics connected with ancient Tamil civilisation, polity, administration, literature and arts and several aspects of their life. Numerous phases of Tamil life are attempted to be illustrated in brief and clear compass; and the Tamil reader can benefit a great deal from a careful study of its pages. Illustrative extracts from literature and copious references add to the scholarly value of the book.

Both these should be on the shelves of every careful student of the Tamils.

(Sd.) C. S. Srinivasachari.

# OTTRUMAI OFFICE TAMIL PUBLICATIONS

General Editor : M. E. Veerababu Pillai, B.A., L.T.

| | | Rs. | As. |
|---|---|---|---|
| 1. | Tamilagam | 2 | 4 |
| 2. | Tamilar Charitiram | 2 | 0 |
| 3. | Kalithogai Vachanam | 1 | 8 |
| 4. | Pathuppattu Vachanam | 1 | 0 |
| 5. | Paripadal Vachanam | 1 | 0 |
| 6. | Pathitruppathu Vachanam | 1 | 0 |
| 7. | Purapporul Vilakka Vachanam | 1 | 0 |
| 8. | Kurunthogai Vachanam | 1 | 4 |
| 9. | Akananuru Vachanam Part I | 1 | 0 |
| 10. | Do. Do. Part II | 1 | 0 |
| 11. | Do. Do. Part III | 0 | 12 |
| 12. | Thembavani Vachanam | 0 | 8 |
| 13. | Studies in Chilappathikaram | 1 | 8 |
| 14. | Story of Chilappathikaram | 0 | 8 |
| 15. | Nine Lilis of the Tamil land | 0 | 10 |
| 16. | Pulamaivithaga Bodhini | 1 | 8 |
| 17. | Vinotha Charitiram | 0 | 12 |
| 18. | Kalingathupparani Vachanam | 0 | 14 |
| 19. | Arivuraikkovai | 0 | 10 |
| 20. | Arivuraimalai | 0 | 12 |
| 21. | Tamil Nattu Muventher | 0 | 12 |
| 22. | Pre-historic Tamils | 1 | 12 |
| 23. | Rajarajan | 1 | 8 |
| 24. | Tamil and the Tamils (in the press) | 0 | 10 |

**Ottrumai Office, No. 8, Theagarayanagar, Madras.**